Nallur Branch Library

6-4-1994
யாழ்ப்பாணம்

# சுதந்திரப் பறவைகள்

பறவை 09 பாடல்03 1994 பங்குனி-சித்திரை அன்பளிப்பு ரூபா 5-00

# சீதனக் கொடுமையை ஒழிக்க

## தமிழீழப் பெண்கள் போர்க்கோலம்

அனைத்துலகப் பெண்கள் நாளை யொட்டி கோட்டரீதியாக நடாத்தப்பட்ட எழுச்சிக்கூட்டங்களில் சீதனத்திற்கு எதிரான அறைகூவல்கள் விடப்பட்டன. வலிகாமம், வடமராட்சி,தென்மராட்சி, தீவகம் ஆகிய இடங்களில் நடைபெற்ற எழுச்சிக் கூட்டங்களிலும் கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார், வவுனியா, மணலாறு ஆகிய இடங்களில் நடைபெற்ற கூட்டங்களிலும் கலந்துகொண்டு உரையாற்றிய பேச்சாளர்கள் பலரும் இதனையே வலியுறுத்திக் கூறினர்.

சீதனமானது பெண்களின் வாழ்க்கையில் கொடுமையான தாக்கத்தினை ஏற்படுத்தும் ஓர் பாரிய சமூகப்பிரச்சினை. இதனால் முழுச்சமுதாயமுமே பாதிப்படைகிறது. இச்சீதனத்தின் கொடுமையால் இன்று பலபெண்களின் வாழ்வு கண்ணீரிலே கரைகிறது.

இராணுவ அனர்த்தங்களினால் வீடிழந்து, சொத்துக்கள் இழந்து ஏதிலிகளாக ஓடிக்கொண்டிருக்கும் குடும்பங்களிலுள்ள பெண்களின் வாழ்வு பெருமூச்சுக்களால் நிறைந்ததேதவிர, திருமணவாழ்வை எட்டமுடியாதவர்களாக வாழ்கின்றனர்.

திருமணவாழ்வை சீதனமே நிச்சயிக்கிறது என்ற நிலைப்பாட்டிலுள்ள எமது சமுதாயத்திலே பெண்கள் முன்னேற்றகரமாக வாழவேண்டுமாயின், அவர்களது தனித்துவம் மதிக்கப்பட வேண்டுமாயின் சீதனம் என்ற நிலைப்பாடு முற்று முழுவதுமாக அழித்தொழிக்கப்படவேண்டும்.



மறைந்தது, ஒருபொழுது.
மெல்ல இருள் விலகி
செல்லும்பாதை தெளிவுடன்,
காலிற் கணீரென்றொலித்த
சிலம்புகளை உதறிவிட்டு
ஒலிக்கின்ற முரசினை நோக்கி

முற்று முழுவதுமாக அழித்தொழிக்கப்படவேண்டும்.

இவ்வாறு எழுச்சிக்கூட்டங்களிலே உரையாற்றிய பலரும் சீதனக்கொள்கைக்கு எதிரான கருத்தை வலியுறுத்திக் கூறினர்.

எமது போராட்டம் கூர்மையடைந்து வியத்தகு சாதனைகளை ஈட்டிக்கொண்டிருக்கும் இச்சூழ்நிலையில், தமிழீழப் பெண்ணினம் தன்னை விடுதலைப்பாதையில் இணைத்து இந்த மண்ணின் விடிவுக்காகப் போராடிக் கொண்டிருக்கும் இத்தருணத்தில், பெண் இனம் விடுதலையை நோக்கி விழித்தெழவேண்டியது முக்கியமானது. இந்த விழிப்புணர்வின் ஆரம்பகட்டமாக சமுதாயத்திலே புரையோடிப்போன சீதன வழக்கங்கள் முற்றாகத் தடை செய்யப்படவேண்டும்.

சீதனப் பிரச்சினையின் தாக்கம் மேலும் மேலும் தீவிரமாகிக்கொண்டு செல்கிறதேதவிர குறையவில்லை. எனவே இதனை நீக்க வேண்டுமாயின் அனைத்து மக்களும் உறுதியுடன் நின்று ஒத்துழைக்கவேண்டும்.

இப்பிரச்சினையை முற்றுமுழுதுமாக ஒழிப்பதற்கான ஆக்கபூர்வ நடவடிக்கைகள் விரைவாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

ஒலிக்கின்ற முரசினை நோக்கி
எம்பாதங்கள் அகலப்பதியும்.
அதில் வெல்லுகின்ற சேதிதெரியும்.

இவ் இதழ் அனைத்துலகப் பெண்கள் நாள் சிறப்பிதழாக வெளிவருகின்றது.

## உள்ளே . . .


★ பெண்ணியம்-தோற்றம்-பின்னணி-வளர்ச்சி

★ பெண்கள் மீது வன்முறை எப்படி நடைபெறுகிறது.

★ சிறப்புத் தளபதி ஜனா அவர்களுடனான நேர்காணல்

★ நிமிர்ந்து நில்லுங்கள்

★ பள்ளி எழுந்திடுவீரே

★ தமிழீழ நாட்டார் பாடல்களில் பெண்கள்

★ துரோகியின் தாய்

எங்கள் பார்வையில் ...

# ஆழமாகப் புரிந்துகொள்வோம்

**1918** ஆம் ஆண்டிலிருந்து உலகிலே பெண்களுக்கென ஒரு நாள் பிரகடனப்படுத்தப்பட்டு, கைக்கொள்ளப்பட்டு வருகின்றது. ஆரம்பத்தில் ஊதியம், ஓய்வு வேண்டும் என்று ஒரு சில கோரிக்கைகளுடன் கைக்கொள்ளப்பட்டுவந்த அனைத்துலகப் பெண்கள் நாள், இன்று காலமாற்றத்துக்கு ஏற்ப பெண்களுக்கு ஏற்படுகின்ற பல்வேறுபட்ட சிக்கல்களுக்குத் தீர்வுகாணுமுகமான பல கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டு கைக்கொள்ளப்படுகின்றது.

இப்படியான ஒரு சூழ்நிலையில் பலருக்கு அனைத்துலகப் பெண்கள் நாள்பற்றியும், பெண் விடுதலைபற்றியும், காலத்துக்குக் காலம் பெண்களால் முன்வைக்கப்படுகின்ற கோரிக்கைகள் பற்றியும் பல ஐயங்கள் ஏற்படுவதுண்டு. ''உங்களுக்கு இன்னும் என்ன வேண்டும் என்று பெண்விடுதலைபற்றிப் பேசுகிறீர்கள்; எழுதுகிறீர்கள்'' "நாங்கள் செய்கின்ற எல்லாவற்றையும் நீங்கள் செய்கின்றீர்கள்தானே? பின்னரும் பெண் விடுதலை என்று என்ன செய்யவிரும்புகிறீர்கள்? ஆண்களை அடிமைப்படுத்தப் போகின்றீர்களா?'' ''பெண்கள்தானே பெண்களை ஒடுக்குகிறார்கள். பின்னர் ஏன் ஆண்களைக் குற்றம் சாட்டுகிறீர்கள்? ''என்றெல்லாம் பல கேள்விக் கணைகள் பெண்களை நோக்கி அடிக்கடி செலுத்தப்படுவதுண்டு.

இப்படியான அர்த்தமற்ற பல ஐயங்கள் பலரிடமும் இருப்பதால்தான் நாங்கள் எந்நேரமும் பெண்விடுதலைபற்றியும், பெண்களின் அடிப்படை உரிமைகள் பற்றியும் அடிக்கடி பேசவேண்டியிருக்கிறது; எழுதவேண்டியிருக்கின்றது.

பெண்விடுதலை என்ற கோட்பாட்டை எல்லாரும் தெளிவாகப் புரிந்து கொள்ளவேண்டியது முதலில் அவசியமாகிறது. பெண் விடுதலைபற்றிய கருத்துக்கள் வேறுபட்டுக் காணப்படுகிறது என்பது உண்மையே. ஆனால் தமிழீழ விடுதலைப் புலிகளாகிய நாம் பெண் விடுதலைபற்றி ஒரு தெளிவான வரையறையை வைத்துள்ளோம். ''ஆண்கள் செய்கின்ற எல்லாவற்றையும் பெண்கள் செய்வதுதான் பெண்விடுதலை'' என்றோ, அல்லது ஆண்களைப் பெண்கள் அடிமைப்படுத்துவதுதான் பெண்விடுதலை என்றோ நாம் எக்காலத்திலும் கருதவில்லை.

பெண்களுக்கும் ஆண்களுக்கும் இடையிலான உறவில் ஏற்படும் ஆழமான புரிந்துணர்வுதான் பெண்விடுதலைக்கு வழிகோலும் என்பதே எமது கொள்கை.

பெண்களின்றி ஆண்கள் தனித்தோ, ஆண்களின்றிப் பெண்கள் தனித்தோ வாழ்வது சாத்தியமில்லாத ஒன்று. பெண்களுக்கும் ஆண்களுக்கும் இடையில் ஏற்படும் புனிதமான உறவில்தான் வாழ்வு இயக்கமே தங்கியிருக்கின்றது. அப்படியிருக்கும்போது "ஆண்களை அடிமைப்படுத்தவேண்டும் என்ற நோக்கிலா பெண் விடுதலைபற்றிப் பேசுகிறீர்கள்?' என்பது எத்துணை அர்த்தமற்ற கேள்வி.

ஒரு இனம் தன் உரிமைகள் கிடைக்கும்வரை போராடியே தீரும் என்பது உலக நடைமுறை. பெண்ணினமும் அப்படித்தான் போராடுகிறது. தம்மீது திணிக்கப்பட்டுள்ள சமூக, அரசியல், பொருளாதார, ஆணாதிக்க அழுத்தங்களிலிருந்து தன்னை முழுமையாக விடுவிக்கும் வரை பெண்ணினம் போராடியே தீரும். ஈழப் பெண்களின் இந்த உரிமைப் போராட்டத்தை எமது இயக்கம் அங்கீகரிக்கின்றது. பெண்களுக்காக எமது இயக்கம் குரல் கொடுக்கின்றது. பெண் விடுதலையை தனது கொள்கைகளுள் ஒன்றாக எமது இயக்கம் வரித்துள்ளது. இந்த மண்ணிலே எதிரிகளால் இழைக்கப்படுகின்ற கொடுமைகளை எதிர்த்துப் போராடுவதற்குப் பெண்களுக்கு உள்ள உரிமையை மதித்து, அவர்களைத் தனது படையணிகளுள் ஒன்றாக இணைத்துள்ளது.

உலகிலே ஏனைய நாடுகளோடு ஒப்பிடுகையில் தமிழீழத்திலே பெண்களின் உரிமைகள் பேணப்படுவதற்கான நடவடிக்கைகள் அதிகளவிலேயே எடுக்கப்படுகின்றன. தமிழீழக் காவற்றுறையாயினும் சரி, தமிழீழ நீதிமன்றங்களாயினும் சரி பெண்களின் உரிமைகளைப் பாதுகாப்பதில் அதிகளவு கவனம் செலுத்துகின்றன.

பெண்களின் சொத்துரிமையைப் பேணக்கூடிய வகையில், அதே நேரம் சீதன வழக்கை இல்லாதொழிக்கும் நோக்கில் புதிய சட்டங்களும் ஆக்கப்பட்டுக்கொண்டிருக்கின்றன. இவை யாவும் பெண்களின் உரிமைகளை உயர்நிலையிலே பேணுவதற்காக எமது இயக்கத்தால் எடுக்கப்படுகின்ற நடவடிக்கைகளே ஆகும்.

இந் நேரம் ''பெண்களைப் பெண்கள்தானே ஒடுக்குகின்றார்கள். பின் எதற்காக ஆணாதிக்கம் என்கிறீர்கள்?'' என்று கேட்பவர்களுக்கு ஒரு விடயத்தைக் கூறவிரும்புகின்றோம்.

'பெண்களைவிட ஆண்கள்உயர்ந்தவர்கள்' என்பதுஆணாதிக்கக் கருத்து ஆகும். இக் கருத்தை உடையவர்கள் பெண்களாயிருந்தாலென்ன, ஆண்களாயிருந்தாலென்ன அவர்கள் ஆணாதிக்க வாதிகள்தான். ஆணாதிக்கக் கருத்துக்கள் ஆண்களிடம் மட்டுமல்ல பெண்களிடமும் இருக்கிறது என்பது உண்மைதான். ஆனால் நாம் "ஆணாதிக்கக் கருத்துலகத்துக்கு" எதிராகப் போராடுகின்றோமே தவிர, ஆண்களுக்கு எதிராக அல்ல. ஆணாதிக்கக் கருத்துலக மாயைக்குள் சிக்கியிருக்கும் பெண்களையும் ஆண்களையும் அதிலிருந்து வீடுவிக்க விரும்புகின்றோம்.

பெண்களும் ஆண்களும் ஒருவரையொருவர் ஆழமாகப் புரிந்துகொண்டு, விட்டுக்கொடுத்து வாழ்வதுதான் பெண்ணின விடிவுக்கு வழிகோலும் என்பதையே நாம் அழுத்திக் கூறவிரும்புகின்றோம்.

# சிறுவர் போசாக்குப் பராமரிப்புப் பூங்கா

சுன்னாகம் தெற்கு வெள்ளை வீதியில் அமைந்துள்ள சிறுவர் போசாக்குப் பராமரிப்புப் பூங்காவின் முதலாவது ஆண்டு நிறைவு விழா 02. 03. 1994 அன்று நடைபெற்றது.

எமது தேசியத்தலைவரின் பணிப்பின் பேரில் அவரது ஆலோசனைக்கமைய ஆரம்பிக்கப்பட்ட இத்திட்டம் எமது தேசத்தின் சிறார்களை ஆரோக்கியமானவர்களாக, ஆளுமைநிறைந்தவர்களாக வளர்த்தெடுக்கும் பணியைக் குறிக்கோளாகக் கொண்டு நடைமுறைப்படுத்தப்பட்டது.

உறுதியான பொருளாதார அடித்தளமில்லாத, வசதியற்ற குடும்பங்களைச் சேர்ந்த குழந்தைகள் முறையாக சத்துணவூட்டப்பட்டு வளர்க்கப்படவேண்டியது தேசத்தின் வளர்ச்சியில் முக்கியமானது. இதனடிப்படையில் இத்தகைய சிறுவர் பராமரிப்பு நிலையங்களின் தேவை அத்தியாவசியமான ஒன்றாகக் கருதப்பட்டது.

அன்றாட கூலி உழைப்பாளிகளாக, தாயும் தந்தையும் வேலைக்குச் செல்லும் குடும்பங்களின் குழந்தைகளின் பராமரிப்பினை இந் நிலையங்கள் பொறுப்பேற்கின்றன. குழந்தைகளை வளர்ப்பதில் முக்கிய பங்கேற்பவள் தாய் என்றவகையில், வேலைக்குச் செல்லும் தாயின் சுமைகளை, பளுவைக் குறைப்பதில் இத்தகைய நிலையங்கள் பெரும் பங்காற்றுகின்றன. இவற்றின் மேலான தேவை கருதியே நாள் உழைப்பாளிகள் அதிகமாகவுள்ள பின்தங்கிய கிராமங்களில் இத்தகைய நிலையங்கள் நிறுவப்பட்டன.

தற்போது யாழ்குடாநாட்டில் ஒன்பது இடங்களில் சிறுவர் போசாக்குப் பூங்காக்கள் நிறுவப்பட்டுள்ளன,

சிறுப்பிட்டி சனசக்தி சனசமூக முன்றல், சுன்னாகம் தெற்கு வெள்ளைவீதி, நாவற்குழி, லவனிதா குடியிருப்புத்திட்டம், கைதடி நாவற்குழி - உடுப்பிட்டி - இலக்கணாவத்தை, யாழ்ப்பாணம் - பொம்மைவெளி, நவாலி கொத்துக்கட்டி, கோப்பாய், இருபாலை, கரவெட்டி - துன்னாலைதெற்கு போன்ற இடங்களில் அமைந்துள்ள நிலையங்கள் ஒவ்வொன்றிலும் நூற்றுக்கும் மேற்பட்ட சிறார்கள் அங்கத்தவர்களாக வளர்த்தெடுக்கப்படுகிறார்கள்.

இதனைவிட கிளிநொச்சி, வவுனியா, முல்லைத்தீவு ஆகிய இடங்களிலும் இத்தகைய நிலையங்கள் நிறுவப்பட்டு தனது பணியை நடாத்திக்கொண்டிருக்கிறது.

விடுதலைப்புலிகள் அரசியற்றுறையினரால் நடாத்தப்படும் இத்திட்டமானது எமது தேசத்தின் மழலைகளை உடல் உள விருத்தியுடையவர்களாக வளர்த்தெடுக்கும். எல்லாவற்றிற்கும் மேலாக பின்தங்கிய கிராமங்களில் பொருளாதார பலமற்ற நிலையிலுள்ள குடும்பங்களிலுள்ள பெண்களின் சுமைகளைப் பெருமளவிற் குறைக்கும்.

## துரோகியின்

னரே அவனது உயிர் பிரிந்துவிட்டது

சடலத்தை தள்ளிவிட்டு நிமிர்ந்து அப் படை வீரர்கள் சூழ்ந்து கொள்கின்றனர்.

''ஒருபிரஜை என்ற முறையில் என் நாட்டுக்கான கடமையை நிறைவு செய்துவிட்டேன். ஒரு தாய் என்ற முறையில் எனது வாழ்க்கை முடிந்து விட்டது.''

எந்தக் கத்தியால் அவளது மகனின் இதயத்தைக் கிழித்தாளோ அதே கத்தியால்தன்னை மாய்த்து வீழ்கிறாள்.

''அவள் ஒரு தாய். பலநூறு உயிர்களின் சாவைவிட தன் மகனின்இழப்பு சிறந்ததென அவள் முடிவு செய்து விட்டாள்.''

மூலம்
Tales of Italy
Mother of a
Traitor

# பெண்ணியம் -தோற்றம் - பின்னணி - வளர்ச்சி

-குந்தவை-

பெண்ணியம் (Feminism) என்ற பதம் மேற்குலக சமூகத்திலிருந்து பெறப்பட்ட ஒரு அண்மைக்காலத் தோற்றப்பாடு ஆகும். பெண்கள் தொடர்பான கருத்துநிலையில் எழுச்சியை மையமாகக் கொண்டு 19-ம்நூற்றாண்டின் பிற்பகுதியிலும் 20-ம் நூற்றாண்டின் முற்பகுதியிலும்ஐரோப்பா, அமெரிக்கா போன்ற நாடுகளில் இது பாவனைக்கு வந்தது. Feminisme என்ற பிரான்சியச் சொல்லில் இருந்து ஆங்கிலத்திற்கு வந்த இச்சொல் 1880 களில் பிரான்சின் முதலாவது பெண் வாக்குரிமைச் சபையின் முன்னோடியும், பெண்களுக்கான அரசியல் உரிமைக்காக வாதாடி வருபவருமான அக்லேட் (Hurbertine Auclert) என்பவரால் முதன் முதல் பயன்படுத்தப்பட்டது. 1890 களில் பரவலான முறையில் பிரான்ஸ் பெண்கள் அமைப்புகளினாலும் பெண்கள் சார்ந்த வெளியீடுகளிலும் இடம் பெற்ற இச்சொல்லானது இதே காலப் பகுதியிலேயே இங்கிலாந்துக்கும் குடிபெயர்ந்தது. அமெரிக்காவில் 1906-ம் ஆண்டு ரிவியூ ஒவ் ரிவியூ என்ற பத்திரிகையில் முதன் முதல் 'பெண்ணியம்' என்ற பதம் பயன்படுத்தப்பட்டுள்ளது. இங்கும்கூட லத்தின் அடியிலான Femina என்பதுடன் நவீன எண்ணக்கருவான ism என்பதை இணைத்து அத்துடன் ஆங்கிலப் பயன்பாட்டில் இருந்த சோசலிசக் கருத்தையும் சேர்த்து இப்பதத்தின் பொருளை வரையறை செய்யும் தன்மை காணப்பட்டது.

பெண்ணியம் ஒரு அண்மைக்காலத் தோற்றப்பாடு எனின், இதற்கு முன்பு பெண் தொடர்பான பிரச்சினைகளோ அவற்றைத் தீர்ப்பதற்கான அமைப்புக்களோ இருந்திருக்கவில்லையா என்ற வினா எழக்கூடும். 19-ம் நூற்றாண்டின் ஆரம்ப கால மக்களால் பெண்ணியம் என்ற பதம் பயன்படுத்தப்படவில்லையே தவிர, பெண் இயக்கம் (Women movement) என்ற பெயரில் பல அமைப்புக்கள் செயற்பட்டன. பெண்ணின் முன்னேற்றம், பெண்ணின் நலம், பெண் உரிமை, பெண்களுக்கான வாக்குரிமை போன்றவை பற்றியே அக்காலப் பகுதியில் பேசப்பட்டது. பெண் இயக்கம் பற்றி பெண்கள் வீட்டிலிருந்து வெளியே சென்று அறச் சிந்தனைசார்ந்த செயற்பாடுகள், சமூக நலன் போன்றவற்றில் ஈடுபடுவதற்கும், குடியியல் உரிமை, சமூக சுதந்திரம், உயர்கல்வி, உழைப்பூதிய தொழில்களில் நுழையும் உரிமை போன்றவற்றை வென்றெடுப்பதற்கான போராட்டத்தில் பின்னணியாக நிற்பதில் பெண் இயக்கத்தின் பங்கு பற்றியுமே பேசப்பட்டது. பொதுவாகஅமெரிக்காவிலும், ஐரோப்பாவிலும், எழுந்த முதலாவது பெண் இயக்கம் பெரும்பாலும் வாக்குரிமை, கல்வி, சொத்துரிமை போன்ற குறிப்பிட்ட சில சீர்திருத்தங்களைப் பெறுவதன் மூலம் பெண்ணின் நிலையை அபிவிருத்தி செய்வதற்குரிய ஒரு முயற்சியையே வேண்டிநின்றது. ஆனால் இச்சீர்திருத்தங்கள் எவ்வளவு புரட்சிகரமானவையாக தோன்றிய போதிலும் பெண் இனம் முழுவதும் இவ்வுரிமைகளைப் பெற்றுக் கொள்ளவில்லை. மேற்குலகில் இவை வென்றெடுக்கப்பட்ட பின்பு பணம் படைத்த பெண்களில் ஒரு சிறிய விகிதத்தினர் மட்டுமே அவற்றைப் பயன்படுத்திக் கொள்ள முடிந்தது. இக்காலப் பகுதியில் ஒரு பெண்ணின் அசைவானது முழுப் பெண் இனத்தையுமே அளக்கும் அளவுகோலாகக் கருதப்பட்டது.

ஆனால் 20ம் நூற்றாண்டு, இதிலிருந்து மாறுபட்டு பெண் இயக்கமானது இலக்கண ரீதியற்றதாகவும், தனித்த ஒரு பெண்ணின் குரல் குழப்பம் வாய்ந்ததாகவும் கருதப்படுகின்றது. 1910 களில் பெண் இயக்கம் என்ற பதம் வழக்கற்றுப் போகப் பெண்ணியம் என்பது பயன்பாட்டிற்கு வந்தது. பெண் இயக்கத்திலிருந்து பெண்ணியம் என்ற பதம் குறிக்கும் பொருள் வேறுபட்டதாகவும் கருதப்படுகின்றது. இது ஒரு கருத்து நிலையாகவும் பெண்ணின் அந்தஸ்தை உயர்த்துவதற்கான வழி வகைகளைக் கண்டுபிடிக்கின்ற சீர்திருத்த இயக்கமாகவும் கருதப்படுகின்றது. பெண்கள் அவர்களின் பால்வகை வேறுபாடு காரணமாக ஒடுக்குமுறைக்கு உள்ளாகின்றார்கள். தொடர்ந்து உள்ளாக்கப்பட்டுக்கொண்டு வருகின்றார்கள் என பெண்ணிய வாதிகள் கருதுகின்றனர். அதுபோல் பெண்ணியச் சார்பாளர்கள் பெண் வாக்குரிமை இயக்கத்துடனான அதன் நெருங்கிய தொடர்புக்கு எதிர்மாறாக பெண்ணியத்தை வாக்குரிமை இயக்கத்தினின்று வேறுபடுத்திப் பார்க்கின்றனர். பரந்த ரீதியில் பெண்ணியம் குறிக்கும் கருத்து, பாலியல் புரட்சி சார்ந்ததாகவும் கருதப்பட்டது. இச் சொல்லின் கருத்து இன்று விரிவடைந்து சமூகத்தில், வேலைத் தலத்தில், குடும்பத்தில் பெண் ஒடுக்குமுறை, பெண் சுரண்டல் தொடர்பான அறிவு நிலையைப் பெறுவதற்கும் இந் நிலையை மாற்றுவதற்குப் பெண்களால் மேற்கொள்ளப்படுகின்ற உணர்வு ரீதியான செயற்பாடுகளைக்குறிப்பதற்கும்பயன்படுத்தப்படுகின்றது. இக்கருத்து நிலையானது பெண் விடுதலையை வேண்டி நிற்கும் இயக்கங்களுக்கும் அப்பால் சென்று, பெண்களுக்கு எதிரான, தற்போது நடைமுறையில், உள்ள வேறுபாடுகளை மாற்றியமைக்க முயல்கின்றது. எவ்வாறாயினும் பெண்ணியத்தின் இன்றைய வளர்ச்சி நிலைக்கு ஆரம்பகாலப் பெண் இயக்கமும் மத்திய கால வாக்குரிமை இயக்கங்களும் மிகப்பெரும் பங்காற்றியுள்ளன என்பது மறுக்க முடியாத உண்மை.

'பெண்ணியம்' என்ற எண்ணக் கருவிற்கு பொருள் வரையறை செய்வதற்கான காலம் வந்துவிட்டது. இதனை தேவையற்றது எனப் புறக்கணிப்பது இனிமேல் சாத்தியமில்லை. எமது பெண்களின் இரத்தத்தில் கரு உயிர்மம் உண்டு.இதயத்தில் கொள்கை உண்டு. எமது செய்தித்தாள்களின் பக்கங்களில் பெண்ணியம் என்ற பதம் நாளாந்தம் காணப்படுகிறது. 'பெண்ணியக் கோட்பாடுகள்' அல்லது சித்தாந்தங்களும் அது தொடர்பான முடிவுகளும் ஒவ்வொரு நாளிலும் உண்டு என 1914ம் ஆண்டு செஞ்சுரி (Century) என்ற சஞ்சிகையின் ஆசிரியர் தலையங்கம் பெண்ணியம் பற்றி குரல் எழுப்பியது. இக்காலப்பகுதியில் ஒரு அகராதியில் கூட இச்சொல் சேர்க்கப்படாத அளவிற்கு இச் சொல் புதிதாக இருந்தது என அதன் சார்பாளர்கள் குறிப்பிடுகின்றனர். '' பெண்களின் உளப்போக்கில் மாற்றம் ஏற்பட்டுக் கொண்டிருக்கின்றது. இம்மாற்றத்தைப் பதிவு செய்வதற்குரிய சரியான சொல் எமக்குத் தேவைப்படுகின்றது'' என பெண்களின் அன்றைய மாற்றம் பற்றிக் குறிப்பிட்ட நியூயோர்க் நகரப் பெண்களின் தலைவியான ஜெனி கொவ், '' ஏனைய சொற்கள் போன்று அபிவிருத்தி நோக்கிய பெண்ணின் முயற்சியை வெளிப்படுத்தக்கூடிய ஒரு சொல்லாகப் பெண்ணியம் என்ற சொல் கருதப்படலாம்'' எனக் கூறுகிறார். இக்காலப் பகுதியில் பெண்கள் மட்டுமன்றி ஆண்களும் கூட இச்சொல்லை ஒரு பொதுவான பேச்சுச் சொல்லாக ஒரு பரிபாஷையாகக் கொண்டிருந்தனர். பருவ இதழ் இலக்கியங்களுக்கான வாசகர் வழிகாட்டியின் 1910-1914ஆண்டிற்குரியதொகுதியில்பெண்ணியம் என்ற பொருள் தலைப்பின் கீழ் பெண்ணியம் சார்ந்த 40 கட்டுரைகள் அட்டவணைப்படுத்தப்பட்டன. இவை அனைத்தும் 1911ம் ஆண்டிற்கு பிற்பட்டகாலப் பகுதியைச் சார்ந்ததாகவே உள்ளன.

பெண்ணியம் என்ற கோட்பாடு தொடர்பாகப் பல்வேறுபட்ட காலப் பகுதியில் பலதரப்பட்ட அறிஞர்களால் பல்வேறு அணுகுமுறைகளில் வரைவிலக்கணங்கள் கொடுக்கப்பட்ட போதும் பிரபல்யம் வாய்ந்த சிலவற்றை மட்டும் இங்கு குறிப்பிடுதல் பொருத்தமானதாகும். "பாலியல் சார்ந்த அரசியல், பொருளாதார சமூக சமத்துவத்திற்கான கோட்பாடு பெண்ணியம்'' என வெப்ஸ்ரர் (Webster) அகராதி பொருள் தருகின்றது. மேலும் பெண்களுக்கு எதிரான தடைகளை நீக்கும் வழிவகைகளைக் கண்டுபிடிப்பதற்கு 19ம், 20ம் நூற்றாண்டுப் பெண் இயக்கங்களின் ஒழுங்கமைக்கப்பட்ட செயற்பாடுகளும் இப்பெயரினால் குறிப்பிடப்படுகின்றன எனவும் குறிப்பிடுகின்றது.

அமெரிக்க தேசிய வாக்குரிமை அமைப்பின் அமைப்பாளரான திருமதி கரி சப்மன் கட் (Carrie (Chapman Catt) என்பவர், ''பெண்களுக்கும் மானிட சுதந்திரத்திற்கும் இடையில் குறுக்கீடாக உள்ள சட்டங்கள், மரபுகள், நடைமுறைகள் போன்ற செயற்கைத் தடைகளுக்கு எதிராக மேற்கொள்ளப்படுகின்ற உலகளாவிய புரட்சி தான் பெண்ணியம்'' எனக் கூறுகின்றார்.

ஜேல் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த அமெரிக்க வரலாற்றுப் பேராசிரியையான நான்சி கொட் என்பவர் பெண்ணியம் தொடர்பாக மிக விரிவான விளக்கம் ஒன்றைத் தருகின்றார்.வரலாற்றுடன்பிணைக்கப்படாத வகையில் பெண்ணியத்தைப்பார்ப்போமாகில், இது மூன்றுஆக்கக் கூறுகளைக் கொண்டது, முதலாவது கூறு பாலியல் சமத்துவத்தை அடிப்படையாகக் கொண்டது. இங்கு பாலுறவில் சமத்துவம் என்ற நிலையை விட்டுவிட்டு, ஒரு பாலினத்திற்கு இருக்கக் கூடிய உரிமைகளையும் அவர்களுக்கு வழங்கப்படும் வாய்ப்புகளையும் இன்னொரு பாலினம் கட்டுப்படுத்துவதை எதிர்த்தல்என்ற கருத்தை இலக்காகக் கொண்டது. இரண்டாவது கூறு பெண்களின் நிலையானது சமூகரீதியாக கட்டமைப்பு உடையது, கடவுளால் அல்லது இயற்கையால் முன் வகுத்தமைக்கப்பட்டது என்பதை விடவும் மானிட சமூக பழக்க மரபுகளினால் வரலாற்று ரீதியாக அதாவது முன் கருதலோடு வடிவமைக்கப்பட்டது என்பதை வலியுறுத்துவதுடன் பெண்களின் உரிமைகளையும் சுதந்திரத்தையும் பெற்றுக் கொள்வதற்கு இத்தகைய கருத்து மீளமைப்பு செய்யப்படல் வேண்டும் என்பதையும் வலியுறுத்துகிறது. மூன்றாவது கூறு பால்வகைக் குழுவின் இனம் காணுதலுடன் சம்பந்தப்படுகின்றது. பெண் என்பவள் ஒரு உயிரியல் சார்ந்த பால்வகை மட்டுமன்றித் தம்மை சமூகக் குழுவாகவும் கருதிக் கொள்பவர்கள் என்ற கருத்தை அடிப்படையாகக் கொண்டது.

மேற்குறிப்பிட்ட விளக்கம் 20ம் நூற்றாண்டிற்கு ஏற்ப நவீனமுறையில் தற் கால உலகிற்குப் பொருத்தமான வகையில் வடிவமைக்கப்பட்டது என்ற கருத்து எழுந்தாலும் கூட 1910 களில் பெண்ணியம் இருந்தபோது இனம்காணப்பட்ட பெண் உணர்வு, பெண் அடையாளம், பெண் உரிமையைப் பெறுவதற்கான முயற்சிகளைச் சுற்றியிருந்த புதிர்கள் தான் 20- நூற்றாண்டுப் பெண்ணியத்தின் கருப்பொருள் கூறுகளாக உருவாகின. பெண்ணியம் பால்பேறுபாட்டை உள்ளடக்கிய பாலியல் சமத்துவத்தையே வேண்டிநிற்கின்றது.

பெண்ணியத்தின் வளர்ச்சி பற்றிப் பார்க்கும்போது மேற்குலகின் 1850 களிலேயே கோரிக்கைகள் எழும்பிவிட்டன. ஆணைப் போன்றே பெண்ணும் மானிட புத்தி பூர்வ, ஆன்ம ரீதியான செயல்பாடுகளைக் கொண்டவர்கள். எனவே ஆணுக்கு வழங்கப்படுகின்ற வாய்ப்புக்கள், உரிமைகள் பெண்ணுக்கும் வழங்கப்பட வேண்டும் என கோரிக்கைகள் எழுப்பப்பட்டன. பெண்களின் அனைத்துச் செயல்பட்டு வடிவங்களில் சுதந்திரம், பொருளாதார சுதந்திரத்திற்கு இடையூறாக உள்ள அமைப்பு ரீதியான உளவியல் சார்ந்த தடைகளை நீக்குதல், பாலியல் ஒழுக்கம் தொடர்பான இரட்டைத் தராதரங்களை முடிவுக்கு கொண்டு வருதல், பாலியல் சார்ந்த உருப்படிவங்களின் தாக்கங்களில் இருந்து விடுபடல் போன்ற எல்லாவற்றையும் உள்ளடக்கிய சமூகப் புரட்சியை அக்காலப் பெண் இயக்கம் வேண்டிநிற்கின்றது.

சமூகம் தற்போது வைத்திருக்கின்ற நேர்மையற்ற, சமநிலையற்ற சட்டங்களில் எல்லா இடங்களிலும் காணப்படுகின்ற ஆண்பாலுக்குரிய மிகைநிலைகளை எதிர்த்து தடை செய்ய வேண்டிய தேவை எமது சமுதாயத்துக்குண்டு. பெண் கல்வியில், தொழிலில், பிரஜாவுரிமை

(11-ஆம் பக்கம் பார்க்க)

# பெண்கள் மீது வன்முறை எப்படி நடைபெறுகிறது

உலகில் உள்ள எல்லா நாடுகளிலுமே பெண்கள் மீது வன்முறை பிரயோகிக்கப்படுதல் என்பது ஒரு பிரச்சினையாக உள்ளது.

''ஒரு பெண் வன்முறைக்கு உட்படுத்தப்படும்போது குற்ற உணர்வு, பயம், நம்பிக்கை இன்மை, வெட்கம், கோபம், மனச்சோர்வு போன்ற பல உணர்வுகள் அவளை மிக வலிமையாகத் தாக்குகின்றன. ஆயினும் அத்தகைய ஒரு நிலையை வெல்வதற்குத் தேவையான உடல் பலமும் உளவலிமையும் பெண்களிடம் உண்டு. அதற்குப் பயிற்சி தேவை. பயிற்சி இருந்தால் பெண்களால் எதையும் செய்ய முடியும்'' என்கிறார் ஒரு பாதிக்கப்பட்ட பிரித்தானியப் பெண்.

இவ்வாறு வன்முறைக்கு உள்ளான பெண்களையும், வன்முறையில் ஈடுபட்ட ஆண்களையும் உளவியல் நிபுணர்கள் விசாரிப்பது வழக்கம். அப்போது இந்தப் பிரச்சினை தொடர்பாக ஒரு தெளிவு ஏற்படுகிறது.

பிரித்தானியாவில் பாலியல் வன்முறைக்கு உள்ளாக்கப்பட்ட ஒரு அழகிய இளம் பெண் தனது அனுபவத்தை மனம் திறந்து விபரிக்கிறார்.

''அப்போது நான் தனியாகப் பயணம் செய்து கொண்டிருந்தேன். அவ்வாறு பயணம் செய்வதில் உள்ள ஆபத்துக்கள் எனக்குத் தெரியும், ஆனால் எனக்கு வேறு வழி இருக்கவில்லை என்பதுடன், நான் மனிதர்கள் பொதுவாக நல்லவர்கள் என்றும் நம்பியிருந்தேன்.

ஒரு பகல் நேரம் சூரிய ஒளி மிக நன்றாகவே விழுந்து கொண்டிருந்தது. நான் தெரு ஓரத்தில் ஏதும் ஒரு வாகனத்தை எதிர்பார்த்து நின்று கொண்டிருந்தேன். என்னைச் சுற்றிப் பல மனிதர்கள் நடமாடிக் கொண்டிருந்தார்கள். பல அலுவல்கள் நடைபெற்றுக்கொண்டிருந்தன. எனக்கு அருகில் வரும் எந்த ஒரு மனிதரையும் என்னால் நன்கு பார்க்க முடியும். ஆகவே அது ஒரு ஆபத்தான இடம் என்று நான் நினைக்கவே இல்லை. என்னுடைய வயது பதினெட்டாக இருப்பது ஆபத்தானது என்றும் நினைக்கவில்லை. தவிரவும் நான் போக வேண்டிய இடத்துக்குப் போய்ச் சேருவதற்கு வேறு வழி என்ன?

எனக்கு அருகில் வந்து நின்ற அந்த வாகனத்தில் இருந்த மனிதருக்குச் சுமார் இருபத்தைந்து வயதிருக்கலாம். நீலக்கண்கள்! மிக உற்சாகமாகவும் நட்பு நிறைந்த முகத்துடனும் காணப்பட்டார். நான் போகுமிடத்திற்கு நேரே என்னைக் கொண்டுபோய் இறக்க முடியும் என்றார். ஆகவே நான் எதுவித ஐயமும் இன்றி அந்த வாகனத்தில் ஏறிக் கொண்டேன். அவரோடு பேசத் தொடங்கியபோதே அவருடைய ஆங்கில அறிவு குறைவு என்பது எனக்குப் புரிந்தது. சிறிது நேரத்துக்குள்ளேயே ஒரு சிறு கடையில் வாகனத்தை நிறுத்தி இனிப்புக்கள் வாங்கிக் கொண்டார். எனக்கும் தந்தார். எனக்கு உண்மையில் பசியில்லாது இருந்தபோதிலும் அந்த நட்புச் சூழலைக் கெடுக்க மனமின்றி நான் அவற்றை வாங்கிக் கொண்டேன். ஆனால் உண்மையில் அது தான் அவர் காண்பித்த முதலும் கடைசியுமான நட்புச் செயல் ஆயிற்று. அந்த இனிப்புடன் எனக்கும் தனக்கும் இடையில் ஓர் உறவை ஆழமாக வளர்த்துக் கொண்டு விட்டதாக அவர் கற்பனை செய்திருக்க வேண்டும்.

பிரதான வீதியில் சென்று கொண்டிருந்த வாகனம் திடீரென்று மரங்களுக்குள்ளே இறங்கியது. ஏதோ பிரச்சினை ஏற்படப்போகின்றது என்று எனக்குத் தெளிவாகத் தெரிந்தது. ஆயினும் அதிகளவு ஐயப்படக்கூடாது என்று நினைக்க முயன்றேன்'

அவன் என்னைத் தொடமுயன்ற போதும் ''இவன் என்னைப் பிழையாகப் புரிந்து கொண்டு விட்டான் போல இருக்கிறது. எனக்கு இவன் மீது எவ்வித விருப்பமும் இல்லை என்பதைத் தெளிவாகச் சொல்லிவிட்டால் பிரச்சினை இல்லை'' என்று நினைத்தேன். ஆனால் ஒரு கண நேரத்துக்குள் அவன் என்னை அடித்து இழுத்துக் காரின் ஆசனத்தில் விழுத்தி விட்டான். நான் ஒருவாறு சறுக்கி ஆசனத்தின் கீழே வந்து வாகனத்தின் தரையில் அழுதபடி முடங்கிக் கொண்டேன்.

நான் பேசும் ஆங்கிலம் அவனுக்கு அதிக அளவில் விளங்காதென்று எனக்குத் தெரிந்த போதும், நான் கதைக்க முயன்றேன். அவனது வாழ்வில் அவனுக்குத் தேவையான அவனுக்கு நெருங்கிய உறவினர்களான பெண்களைப்பற்றிச் சிந்திக்கும்படி அவனிடம் கூற முயன்றேன். அதை அவன் நினைத்துக்கொண்டால் அவனால் எனக்குத் துன்பம் செய்ய முடியாது என்று நம்பினேன்.

''உனக்குத் தாய் இல்லையா? சகோதரிகள் இல்லையா? அவர்களுக்கு இப்படி நடந்தால் உனக்கு எப்படி இருக்கும்?'' என்றெல்லாம் கேட்டேன். ஆனால் அவனோ இவை எதையும் விளங்கிக் கொண்டதாக இல்லை. அவனது நடத்தை கட்டுப்பாட்டை மீறும் அளவுக்கு வந்து விட்டது. அவன் என்னை மேலே இழுத்து ஆசனத்தில் போட்டு விட்டான். அன்று அவன் அணிந்திருந்த துருநிறமான அகலமான 'சிப்' கொண்ட கொட்ரோய் காற்சட்டை. அதைப் போன்ற உடைகளைக் கண்டால் இன்றும் பதினான்கு வருடங்களுக்குப் பிறகும் எனக்குத் தாங்க முடியாத வெறுப்பு ஏற்படுகிறது. எனது எதிர்ப்பை நான் நிறுத்தும்வரை அவன் என்னை அடித்துக் கொண்டே இருந்தான். ஒரு நிலையில் நான் மிகச் சாதுவாக மாறிவிட்டேன். இந்த இடத்தில் இருந்து நான் உயிரோடு மீளப்போவதில்லை என்று எனக்குத் தோன்றிவிட்டது. ஆகவே இந்த விடயத்தில் இனிமேல் செய்வதற்கு ஒன்றுமில்லை என்று நினைக்க வேண்டியதாயிற்று.

சூழலில் வேறு மனித நடமாட்டம் இல்லை. ஆகவே நான் தப்பித்து ஓடினாலும் அவன் என்னைத் துரத்தி வந்து அடிப்பான் என்று நினைத்தேன். உடல்வலி தாங்க முடியாமல் இருந்தது. மேலும் அடி வாங்காமல் செத்துப்போவதே நன்மையானது என்று நினைத்துக் கொண்டேன். நான் போய்ச் சேரவேண்டிய இடத்தில் இருந்து ஏறத்தாழ ஐம்பது மைல் தூரத்தில் இருந்தோம். மூன்று நாட்களாக அந்தக் காட்டுப்பிரதேசத்திலேயே இந்த வாகனம் சுற்றிக் கொண்டிருந்தது. இதற்கிடையில் நான் பலமுறை வன்முறைக்கு ஆளாக்கப்பட்டேன். ஆனால் இப்போது நான் எதிர்க்கவில்லை.

ஒரு முறை நடப்பதற்கும் பல முறை நடப்பதற்கும் இடையில் என்ன வேறுபாடு? எல்லாம் முடிந்த கதை! நான் இன்னும் உயிர் வாழ்தற்கான காரணம் எதுவும் எனக்குத் தோன்றவில்லை. அதீத பயம் காரணமாக எனது உடல் முழுவதும் செயல் இழந்திருந்தது. ஆகவே என்னால் வாகனத்தில் இருந்து குதிக்கவும் முடியவில்லை.

**- கோகிலா மகேந்திரன் -**

மூன்றாம் நாள் வாகனம் பிரதான வீதிக்கு வந்தது. எனக்கு இன்னும் உயிர் இருக்கிறதா என்பது குறித்து எனக்கு ஐயமாக இருந்தது. ஒரு இடத்தில் வீதிச் சைகைக்காக வாகனம் நிறுத்தப்பட்டது. எனது உடைகள் கிழிந்திருந்த போதும், எனது உடல் முழுவதும் காயங்கள் இருந்த போதும், இந்த இடத்தில் நான் தப்பாமல் போனால், அது மிக முட்டாள்தனமான செயல் என்று எனக்குத் திடீரெனத் தோன்றியது, பகல் நேரம். ஆகவே மனத்துணிவை வரவழைத்துக்கொண்டு யன்னல் ஊடாகவெளியே குதித்தேன். அவன் பதற்றப்படவில்லை. அது எதிர்பார்த்த விடயம் என்பது போல் என்னைப்பார்த்து 'குட்பை' சொன்னான்.

இந்த நிலைமையில் நான் போகக் கூடிய இடம் காவல் பணிமனை தவிர வேறு எது? ஆனால் காவல் பணிமனையில் நான் தனியாகப் பயணம் செய்தேன் என்று சொன்ன போது எனக்கு இவ்வாறு நடைபெற்றது பற்றி அவர்கள் அதிகம் அக்கறைப் படாதது போல் எனக்குத் தோன்றிற்று. நானே இந்தப் பரிசைக் கேட்டு வாங்கிப் பெற்றுக்கொண்டது போல அவர்கள் நினைத்தார்களோ? இந்தத் துரோகியின் லைசன்ஸ் பிளேற் நம்பர் என்னிடம் இருந்த போதும் அவனைத் தேடக் காவற்றுறையினர் அதிகம் முனையவில்லை. பிழை இல்லாத ஒரு பெண்ணை ஒருவரும் பாலியல் வன்முறை செய்ய முடியாது என்றே மனிதர்கள் இன்னும் நினைத்துக் கொண்டிருக்கிறார்கள் என்பதற்கு வேறு என்ன சான்று வேண்டும்?

இந்த விடயம் நடந்தபோது எனக்கு இருந்த மிகமோசமான உணர்வு சுயவெறுப்பேயாகும். அத்துடன் பயத்தினால் நான் பாரிசவாத நோயாளி போல் இருந்தேன். 'நேரத்துடனேயே வாகனத்தில் இருந்து பாய்ந்திருக்கலாமே. பாய்ந்திருந்தால் ஒரு கால் முறிவுடன் தப்பியிருக்கலாமே' என்ற சிந்தனை பின்னாளில் எனக்குள் ஒரு குற்ற உணர்வை ஏற்படுத்திக்கொண்டே இருந்தது.

இறுதியாக வீட்டுக்கு வந்து சேர்ந்தபோது, எனக்கு ஏற்பட்டிருந்த உளப் பாதிப்பையும் குற்ற உணர்வையும் மாற்ற நான் ஏதாவது செய்தே ஆகவேண்டி இருந்தது. ஆகவே நான் ஒரு ஓவியருக்கான ''மாதிரி'' ஆக மாறினேன். மூன்று மாத காலம் ஒரு நாளில் பத்து மணிநேரம் அந்த ஓவியருக்கு முன்னே அமர்ந்திருந்தேன். இவ்வாறு செய்ததன் மூலம் என்னைத் தேற்றிக் கொள்ள முடிந்தது.

'எனது உடல் அழகானதாய் இருந்தாலும், அதனைக் கலைக்கண்ணோடு பார்க்கும் ஒரு மனிதருக்கு முன்னால் எந்தவித உணர்ச்சியும் காட்டாமல் என்னால் இருக்க முடிகிறது. ஆகவே தவறு என்மீதோ என் அழகான உடல் மீதோ இல்லை என்று என்னை நானே நம்ப இது உதவியது. அந்த நம்பிக்கை ஏற்பட்டபின் தொடர்ந்தும் 'மாதிரியாக' இருக்க எனக்கு விருப்பம் வரவில்லை ஆகவே இந்த 'மாதிரிஅனுபவம்' ஒரு உளவியல் சிகிச்சைமுறை போலவே எனக்கு அமைந்தது எனலாம்.

கடுங்கோபத்தை ஏற்படுத்துகின்ற அல்லது வெறுக்கத்தாக இது போன்ற சந்தர்ப்பங்களில் எனக்கு நன்மை தரக்கூடிய ஆரோக்கியமான செயற்பாட்டில் இறங்கும் துணிவை எனக்குள் வளர்த்துக் கொள்ளும் முயற்சியில் அடுத்து இறங்கினேன். பயத்தினால் ஒன்றும் செய்ய முடியாதிருந்த அந்த நிலை என்னை வருத்திக்கொண்டே இருந்தது. இறுதியில் நான் ஒரு '' சீன மாஜல் கலை'' வகுப்பில் சேர்ந்து ஐந்து வருடங்கள் பயின்றேன். உடல் ரீதியாகப் பயமுறுத்தப்படும் சந்தர்ப்பங்களில் எப்படி நடந்துகொள்ள வேண்டும் என்பதை அந்தப் படிப்பு எனக்குக் கற்றுத் தந்தது.

பெண்களாகிய நாங்கள் எந்த நேரத்திலும் எங்கும் தாக்கப்படக் கூடும் என்ற பயத்தில் இருந்து நான் விடுபட்டுவிடவில்லை. ஆனால் அத்தகு சந்தர்ப்பத்தில் துணிவுடன் எதிர்த்துப் போராட இப்போது என்னால் முடியும். ஆனாலும் அது என்னால் முடியுந்தான் என்பதை நிரூபிக்கக் கூடிய ஒரு சந்தர்ப்பம் மீண்டும் வரவில்லை.

இந்த அனுபவத்தின் மூலம் பல பெண்களுக்கு இன்னும் தெரியாத பல விடயங்களை நான் படித்துக் கொண்டேன். ஆண்களின் உடல் எவ்வளவு பெரிதாக இருந்தாலும் அவர்கள் எவ்வளவு வலிமையாக இருந்தாலும் பெண்கள் மனத்துணிவு கொண்டால்

(12-ஆம் பக்கம் பார்க்க)

## தமிழீழப் பெண்ணினம் விடுதலை பெறவேண்டும்



பெண் அடிமைத் தனத்தின் விலங்குகளை உடைத் தெறியாத எந்த ஒரு நாடும், எந்த ஒரு சமூகமும் முழுமையான சமூக விடுதலையைப் பெற்றதாகக் கூறமுடியாது. ஏனென்றால், பெண் விடுதலையே சமூக விடுதலையை முழுமை பெறச்செய் கிறது. பெண்கள் சுதந்திரமாக, கௌரவமாக, சமத்துவமாக வாழ வழி செய்யும் ஒரு மக்கள் சமூகமே உயரிய பண்பாட்டின் உன்னத நிலையை அடையமுடியும்,

எமது போராட்டம் தேச விடுதலையை மட்டும் நோக்காகக் கொண்டதல்ல. தேசத்தின் விடுதலையுடன் சமூக விடுதலையையும் இலக்காகக்கொண்டே நாம் போராடி வருகின் றோம். சமூக விடுதலை என்ற எமது குறிக்கோளில் பெண் விடுதலை பிரதான இடத்தை வகிக்கின்றது. சகல ஒடுக்குமுறைத் தளைகளிலிருந்தும் தமிழீழப் பெண்ணினம் விடுதலை பெறவேண்டும். அப்பொழுதே சமூக விடுதலையானது அர்த்தமுடையதாக முழுமைபெற முடியும் என்பது எமது நிலைப்பாடு.

பெண் ஒடுக்குமுறை என்பது ஒரு சமூகப்பிரச்சினை. நீண்ட நெடுங்காலமாக எமது பண்பாட்டு வாழ்வில் ஆழப் புரையோடி நிற்கும் சமூகக்கொடுமை. இந்தச் சமூக அநீதியை வேரோடு பிடுங்கி எறிய எமது இயக்கம் உறுதி பூண்டு நிற்கிறது. இந்த இலட்சியத்தை நாம் வெற்றிகரமாக சாதித்து முடிப்பதாயின் பெண்களின் ஆதரவும் பங்களிப்பும் அவசியம். தமிழீழப் பெண்ணினம் எமது விடுதலை இயக்கத்துடன் அணி சேர்ந்து இந்தப் புரட்சியை முன்னெடுக்க முன்வரவேண்டும்.

தலைவர் திரு வே. பிரபாகரன்

### கட்டளையிடும் இதயங்கள்

மண்ணை நேசிக்கின்றேன்.
மக்களை நேசிக்கின்றேன்.
இவற்றுக்கும் மேலாக
மண்ணையும் மக்களையும்
நேசித்து, அதற்காய் இறுதியாக
மண்ணை உதிரம் சிந்த
முத்தமிட்டு,
மண்ணோடு சங்கமிக்கும்
விடுதலைப் போராளிகளை
நேசிக்கின்றேன்.
நேற்றுவரை
ஒன்றாக
போர்க்களத்தில் எதிரியை
எதிர்க்கப் போகின்ற போதும்,
எமக்கு எத்தனையோ
கேலிக் கதைகள் கூறி
சந்தோசமாகப் போர்க்களமாடியவர்கள்
மண்ணோடு இரண்டறக்
கலக்கும்போது
ஓ ... ... — ...
எம் இதயங்கள்
யாருமே அறியாது
ஓ .. ... வென
ஓலமிடுகின்றன.
ஆனால்
அந்த இதயங்கள்
எம்மைத் தளர விடாது,
மேலும் மேலும்
முன்னேறி - எதிரியை
எங்களின் மண்ணைவிட்டு
துரத்தியடி என
கட்டளை இடுகின்றன.
ஆமாம்.
எங்கள் கரங்கள்
ஓயப் போவதுமில்லை.
எங்கள் கால்கள்
சோரப் போவதுமில்லை.
எங்களின்
சொந்த மண்ணைவிட்டு
எதிரியைத் துரத்தியடிக்கும்வரை
எங்கள்
கண்களுக்கு உறக்கமே
வேண்டாம். வேண்டாம்.
வேண்டாம்.

ரதி

### முப்பரிமாண ஓவியம்

ஒருவனின் முன்னும் பின்னும்
இழுபடும் நிழலாக
கால நகர்வுடன் வெற்றுடல்கள் மட்டும்
தடம்புரண்டோடின!
அழகென்று அணிகலனாய்
உலகம் சுமந்தன தலைகள்!
காலம்,
“சோக்கிரடீசை”ப்போல வந்து
மாயக்கருத்துலகத்தினுள்
கால்பரப்பிக் கொண்டது!
இவர்களின் “ஏன்” என்பது
வாழ்தலுக்கானது.
ஒரு பாலைவனத்திற் பறந்த பறவைக்கு
கிளைபோன்ற
இருத்தலுக்கானது.
ஆறுபக்க அடைப்புக்கள் மட்டுமறிந்த
அழுகையாறு
கட்டற்று, காட்டாறாகி,
திசைதிரும்பி, நாட்டுக்குள் ஓடி......
கோட்பாடுகள்
சீர்திருத்தச் சட்டங்களாய்
பரிணாமம் பெற்றன.
உலக சன வரைபடத்தின் உயரத்தில்
இவர்கள் இருப்பது அன்ன
இருள் கலைப்பிலும் —
சிறிய வட்டத்தினுள் முடங்கிப்போனவர்
உலக விட்டத்தின் விளிம்பில் வந்து
எல்லாமுமாய் ஒன்றித்துப் போயினர்!
புதியவைகளைப் பிரசவிக்க
இந்தத் தாய்களுக்குக் கிடைத்தது பேறு!
எதிர்கால உலகங்களில்
உரிமைகள் அர்த்த நாரி!
இந்த நூற்றாண்டில்
பெண்ணெனும் இருபரிமாண ஓவியம்
முப்பரிமாணமாக்கப்பட்டது!
இனிமேல்
உலகுக்கு இவர்கள்
உன்னதங்கள் செய்வார்கள்,
ஒரு தாயாக!

இளந்திரையன்

*(1994-03-08 இல் நிகழ்ந்த அனைத்துலகப் பெண்கள் நாளை முன்னிட்டு விடுதலைப் புலிகள் மகளிர் அமைப்பால் நடாத்தப்பட்ட இலக்கிய, ஓவியப் போட்டியில் முதற்பரிசு பெற்ற கவிதை)*

### புலரி தேடிடும் புரட்சிப் புறாக்கள்!

*நேற்று இனிதாய்ப் பிறந்த இளந்தென்றற்
காற்று ஒன்றிங்கு கனலாகிப் போனது.
தூற்றி உமிழ்ந்தவர் தூர விழுந்தார்.
போற்றியே புதுப் பரணி எழுந்தது!*

*அழகிய வதனம் அழகைச் சுமந்ததும்
இளகிய இதயம் இரும்பானதும் - கலை
பழகிய கரங்கள் கருவி பிடித்ததும்
இளமை வெறும் துடிப்பல்ல, புதுமைப் புரட்சி!*

*மாதவம் செய்து பூமியிற் பிறந்தது
சீதனக் கொடுமையாற் சிதைந்து போகவா?
மாதர்கள் எழுந்தார் புதியதோர் புயலாய்.
கீதமும் இசைத்தார் விடியலை வியந்து!*

*இதயத்திற் படிந்த சாம்பலைப் போக்கு.
நிதமும் நிஜங்களைப் புதிதென ஆக்கு
இதமற்ற கனவுகளை இழிவென நீக்கு.
உதயத்தை நோக்கியுன் கரங்களை நீட்டு.*

*படையணி ஒன்று பயணம் தொடருது
விடையொன்று காண விடுதலைக் கேள்விக்கு.
உடைவதா பெண்ணின் உயர் பெருமைகள்?
நடையினைக் கட்டு நாமும் இணைவோம்!*

*ஆற்றல் எமக்கும் அதிகமாய் உண்டு!
தூற்றல்செய் பெண்ணை மதியா தவரை.
ஏற்றல்செய் மானுட விடியல் தனையே.
போற்றியே பாடு புனிதப் புரட்சியை!*

*அறிவையும் ஆணுடன் வலிமைகள் தன்னிற்
சரிசமம் இது சமத்துவ வாக்கு!
எரியும் தணலிலெம் உயிரது வேகினும்,
புரிய முடியாத புன்மைகள் போக்குவோம்!*

*வஞ்சியெனக் கூறியினி வஞ்சிக்க முடியாது.
நெஞ்சினிக்கும் கனவினிலெம் காலமினிக்
கரையாது.
துஞ்சியிருந்த நிலை மீண்டும் தொடராது.
பூஞ்சிறகு விரித்த புரட்சிப் புறாக்கள் நாம்.*

கவிதா

# விடுதலைப் புலிகள் மகளிர் படையணியி
## அவர்களுடனான

*''நீண்ட காலமாகப்பல்வேறு விதமான ஒடுக்கு முறைக்கும் ஆளாக்கப்பட்ட பெண்கள் தமிழீழ விடுதலைப் போராட்டத்தோடு தம்மை இணைப்பதற்கான காரணமாக எது அமைந்தது?''*

''எமது மண் என்கின்றபோது அது பெண், ஆண் என்ற இருபாலரையும் உள்ளடக்கியதுதான். எமது மண்ணுக்கு எதிரிகளால் செய்யப்பட்ட, செய்யப்படுகின்ற ஆக்கிரமிப்பு நடவடிக்கைகள் பெண்கள், ஆண்கள் எல்லோரையுமே பாதித்தது. எமது சமூக அமைப்பில் பெரும்பாலான பெண்கள், ஆண்களைச்சார்ந்து வாழும் நிலையிலே இருப்பதால், எதிரியால் ஆண்கள் மீது மட்டும் நடாத்தப்படும் கொலை, சிறைப்பிடித்தல் என்பனகூடப் பெண்களையே பாதிக்கின்றன.

இவற்றைவிட நேரடியாகப் பெண்கள் மீது பிரயோகிக்கப்பட்ட பாலியல் துன்புறுத்தல், பாலியல் வன்முறை என்பன கூடப்பெண்களைக் கடுமையாகப் பாதித்தன. இப்படி ஒருநிலை தமிழீழத்திலுள்ள மூழுப்பெண்களுக்குமே ஏற்படக்கூடிய நிலைமையைத் தடுப்பதற்காகவும், எதிரியை முற்றாக இம்மண்ணிலிருந்து விரட்ட வேண்டும் என்பதற்காகவுமே பெண்கள் விடுதலைப் போராட்டத்தோடு தம்மை இணைத்துக் கொண்டனர்.''

*''பெண்கள் விடுதலைப் போராட்டத்தில் இணைந்து கொண்ட காலப்பகுதிக்கு முன்னர் தமிழ்ச் சமூகத்தில் பெண்கள் நடத்தப்படுகின்ற முறை உங்களைச் சிந்திக்கத் தூண்டியதுண்டா?*

*எல்லோரையும் விட பெண்கள்வித்தியாசமாக நடாத்தப் படுகின்றார்கள் என்பதை உங்களால் உணர்ந்துகொள்ள முடிந்ததா?''.*

''ஓரளவு முடிந்தது. எமது வீட்டுக்கு அருகே வசிக்கும் மாமாவும் மாமியும் அரசாங்க உத்தியோகத்தர்கள். இருவரும் ஒன்றாகத்தான் வேலைக்குப் புறப்பட வேண்டும். ஆனால் மாமி அதிகாலை நான்கு மணிக்கே எழுந்து சமையல், வீட்டு வேலைகள் எல்லாம் முடித்து பிள்ளைகளை பாடசாலைக்கு அனுப்பி, மாமாவைஎழுப்பி மாமாவுக்கு வேண்டியவற்றைச் செய்து பின்னரே வேலைக்குப்போக வேண்டும். அப்போதெல்லாம் 'மாமா ஏழு மணிக்கு நித்திரை விட்டு எழும்பாமல் சிறிது முன்னர் எழுந்து தானும் சேர்ந்து தனது வேலைகளைச் செய்யக்கூடாதா' என நான் எண்ணுவதுண்டு. இந்நிலை

ஆயுதத்தை மேலாகப்பாதுகாப்போம்' என உறுதிஎடுத்துக் கொண்டோம். குப்பியை ஒருவித புனித உணர்வுடன் எத்தனையோ இயக்க இரகசியங்களைப் பாதுகாக்க உதவியது என்ற உணர்வுடன் அணிந்து கொண்டோம். முதலாவது களத்தினிலே சிறிது பதற்றம் ஏற்பட்டாலும் எம்மை வழி நடத்தியவர்களால் அப்பதற்றம் போக்கப்

காணாதவர்களுக்கு அதை புரிந்து கொள்வது, நம்புவது சிறிது சிரமம். இருப்பினும் சிலவற்றைக் கூறுகிறேன். காடு என்பது மனிதர்கள் வாழக் கூடிய ஒரு இடம் அல்ல ஆனால் அங்கு நாமே மரம் வெட்டி, வாளினால் மரம் அரிந்து, அழகாகக் கூடாரம் அமைத்து, எமக்கு வேண்டிய உணவுப்பொருட்களை மூட்டைமூட்டைகளாக நீண்ட

**''முதன்முதலாகப் பயிற்சி எடுத்தபோது சிறிது கடுமையாக இருந்தாலும், 'எங்களின் இப் பயிற்சியால் பல பிரச்சினைகள் தீரப் போகின்றன. பலருக்கு விடிவுதேடிக் கொடுக்கப்போகிறோம்' என்ற உணர்வு எங்களுக்கு உந்துசக்தியாக அமைந்தது. முதன் முதலில்ஆயுதத்தைக் கையில் வாங்கியபோது,குப்பியை அணிந்து கொண்டபோது, 'எமது உயிரிலும் மேலாக சுதந்திரத்தை நேசிக்கின்றோம், எமது உயிர் எமதுடலில் உள்ளவரை ஆயுதத்தை மேலாகப் பாதுகாப்போம்' என உறுதி எடுத்துக்கொண்டோம். குப்பியை ஒருவித புனித உணர்வுடன், 'எத்தனையோ இயக்க இரகசியங்களைப் பாதுகாக்க உதவியது' என்ற உணர்வுடன் அணிந்து கொண்டோம்.''**

பல பெண்களுக்கு உண்டு என்பதும், அவர்களுக்கு சம சம்பளம் இல்லாமல் குறைந்தளவே கிடைக்கின்றது என்பதும், சமூகத்தின் பார்வையில் பெண்கள் ஆணிலிருந்து வெகுதூரம் வேறுபட்டே பார்க்கப்படுகின்றார்கள் என்பதையும் நான் மட்டும்அல்ல பலபோராளிகள் போராட்டத்தில் ஈடுபட முன்னரே ஓரளவு புரிந்து கொண்டுள்ளனர்.''

*''விடுதலைப்புலிகள் அமைப்பில் இணைந்து பயிற்சி பெற்ற பெண்களின் ஆரம்ப கட்டப்போராட்ட வாழ்க்கையைப்பற்றிச்சொல்வீர்களா?''*

''முதன்முதலாகப் பயிற்சி எடுத்தபோது சிறிது கடுமையாக இருந்தாலும், எங்களின் இப்பயிற்சியால் பல பிரச்சனைகள் தீரப் போகின்றன, பலருக்கு விடிவு தேடிக்கொடுக்கப்போகிறோம் என்ற உணர்வு எங்களுக்கு உந்துசக்தியாக அமைந்தது. முதன் முதலில் ஆயுதத்தைக் கைகளில் வாங்கியபோது, குப்பியை அணிந்து கொண்டபோது 'எமது உயிரினும் மேலாக சுதந்திரத்தை நேசிக்கின்றோம். எமது உயிர் எமது உடலில் உள்ளவரை

பட்டதுடன் குறி பார்த்து தேவையானபோது மட்டும் கட்டு ரவைகளை அளவுடன் பயன்படுத்தவும் கற்றுக் கொண்டோம். எதிரியை அடித்து விரட்ட வேண்டும் என்ற உணர்வுடன் தான் நாமெல்லாரும் இயக்கத்தில் இணைந்து கொண்டோம் என்பதால், எதிரியை எதிர்கொள்ளும் மனோவலிமை ஏற்கனவே எம்மிடம் இருந்தது. எதிர்கொள்ளும் ஆற்றலையும், தந்திரோபாயங்களையும் காலப்போக்கிலே பெற்றுக் கொண்டோம்.

*''இந்திய இராணுவம் இங்கிருந்த காலத்தில் விடுதலைப் புலிகள் மகளிர் படையணியின் எண்ணிக்கை மிகக் குறைவு. ஒவ்வொருவர் ஒவ்வொரு பக்கமாகச் சிதறி, பின்னர் கானகத்தில் ஒன்று சேர்ந்தீர்கள் கானக வாழ்க்கையிலே பெண் போராளிகளுக்கு ஏற்பட்ட அனுபவங்களை எங்களுடன் பகிர்ந்து கொள்வீர்களா?''*

''கானக வாழ்க்கையிலே எங்களுக்கு ஏற்பட்ட அனுபவங்களை எழுத்தில் வடிப்பது என்பது சிரமம். அவ்வாழ்வை நேரில்

தூரம் சென்று சுமந்துவந்து, சமைத்து உண்டிருக்கிறோம். திசைகாட்டியின் உதவியுடன் மட்டும் காடுகளில் உலாவியிருக்கிறோம். இந்திய இராணுவத்ினரை எதிர்கொண்டு மோதி விரட்டியிருக்கிறோம். நீர் வசதி கிடைக்காத இடத்து நாமாகவே தனித்து நின்று கிணறு வெட்டி தண்ணீரைப் பெற்றுக் கொண்டோம். இன்னும் சொல்லப்போனால் பெண் போராளிகளால் முடியாதது எதுவுமே இல்லை என்ற உணர்வை கானகத்தில் தான் முழுமையாகப்பெற்றுக் கொண்டோம்.''

*''பெண் போராளிகள்மக்கள் மத்தியில் உலாவ ஆரம்பித்த காலத்தில் மக்கள் அவர்களை எந்த அளவுக்கு ஏற்றுக் கொண்டார்கள்? பெண் போராளிகள் எவ்வாறு அவர்களை அணுகினார்கள்?''*

''பெண் போராளிகள்மக்கள் மத்தியில் உலாவ ஆரம்பித்த காலத்தில் பல மக்கள் அதனை ஏற்றுக்கொள்ளவில்லை. 'இவர்களால் எதிரியுடன் போரிட முடியுமா? அவனின் பலத்துக்கு முன் இவர்கள் காற்தூசு' எனக்கதைத்தவர்களும், 'வேட்டுகளுக்கும் ஷெல்களுக்கும் மத்தியில் இவர்கள்



சிறப்புத் தளபதி

**''ஆண் வேவுப்**
**காலம் போய், பெண்**
**இக்காலகட்டத்தில்**
**வேவுப்போராளி மு**
**குழுவாகச் சென்றது.**
**உறுதிக்கும் மேலும்**

நிற்கமாட்டார்கள். ஓடி
வார்கள்' எனக் கதைத்த
களும் இருக்கத்தான் செ
தார்கள். ஆனால் பெ
போராளிகள் அவர்க
வெறுக்கவும் இல்
ஒதுக்கவும் இல்லை ''நாங்
மக்களுக்காகப் போரா
கிறோம். அவர்களை
ஒதுக்கி வைக்க முடியா
எப்படியாவது அவர்க
இப்போராட்டத்தின் ப
கொண்டு வர வேண்டு
என்ற தலைவரின் வா
துக்கு இணங்க அவர்க
வெறுப்புகளை புறக்கணி
அவர்களை எமது வீரம
நல்ல, செயற்பாடுகள்
கவர்ந்து கொண்டி
கிறார்கள். நிச்சயமாக
பத்தில் பெண்போராளிக
வெறுத்த, சந்தேகம



கப்டன் துளசிராம்



கப்டன் தேனுஜா



கப்டன் வானதி

# ...ரியின் சிறப்புத் தளபதி ஜனா

## ...ன நேர்காணல்



தளபதி ஜனா அவர்கள்

சமூகத்தில் பெண்கள் இப்படித் தான் இருக்கவேண்டும் என்ற வரையறைக்குள் அவர்கள் வளர்க்கப் பட்டதாலும், தனது பிள்ளைகளை சமூகம் ஏசும் தூற்றும் என எண்ணியதாலும் சிறிதளவும் அவர்கள் இந்த வாழ்க்கையை ஏற்றுக் கொள்ளவில்லை. ஆனால் காலப்போக்கில் தேவைகள் மாற, இராணுவ அழுத்தங்கள் அதிகரிக்க, தாமாகவே இவ் வாழ்வை ஏற்றுக்கொள்ளப் பழகிவிட்டனர். ஆனாலும் தமது மக்களுக்கு ஏதும் நடந்து விடுமோ என்ற ஏக்கமும் சிறு வயதிலிருந்து ஊட்டி ஊட்டி அவர்களை வளர்த்த விதத்தால் உண்டாகக்கூடிய பயஉணர்வுகளும் இவர்களிடம் முற்றுமுழுதாக இல்லாமல்

வெளியேற விடாமல் சுமார் நான்கு மணிநேரமாக பெண் போராளிகள் தனித்து நின்று போரிட்டு எதிரிகள் பலரை வீழ்த்தி, எம் 203 பிஸ்ரல் உட்பட வேறுசில ஆயுதங் களையும்,ஒரு இராணுவத்தின் சடலத்தையும் கைப்பற்றி, பெண்கள் முதன் முதலாகத் தனித்துப் போரிட்டு ஆயுதம் எடுத்த சாதனையைத் தலைமையேற்று நிகழ்த்தி முடிந்த பெருமை கப்டன் அஜித்தாவையே சாரும்.

சிலாவத்துறை இராணுவ முகாம் தகர்ப்பு முயற்சியின் போது கப்டன் வானதியின் குழுவை பின் வாங்கும்படி கூறப்பட்டது. ''பலர் காய மடைந்துவிட்டனர். சிலர் வீரச்சாவடைந்து விட்டனர். இத்தனைக்கும் பின்னர் நான் பின்வாங்க மாட்டேன். மேலும் முன்னேறப் போகிறேன்'' என அசாத்திய துணிவுடன் முன்னேற முயன்ற கப்டன் வானதியின் மனோ வலிமையும், சொல்லிலடங்கா வீரமும், பின்னாட்களில் போராளிகளுக்கு பின் வாங்காமல் போரிட உந்துசக்தியாக விளங்கியது.

அதே சமரில் மிக அருகில் இராணுவம் வந்துவிட்டாதல் நிலையெடுத்து அடிபட அவகாசம் இல்லாமல், நின்ற நிலையிலேயே கனரக ஆயுதத்தால் அடித்து பல எதிரிகளை வீழ்த்திவிட்டு தானும் இம்மண்ணை முத்தமிட்ட 2ம் லெப். கோகிலா....

மணலாறிலே இடம்பெற்ற மின்னல் சமரில் பலர் காய மடைந்து, வீரச்சாவடைந்த பின்னரும் தளராமல், பின்வாங்காமல் வீராவேசத் துடன் தனித்து முன்னேறிப் போரிட்டு வீரச்சாவைத் தழுவிக்கொண்ட லெப். சீமா 2ம். லெப். மாலினி ........

கனரக ஆயுதங்களை இலகுவில் கையாண்டு பலரையும் அதில் கைதேர்ந் வர்களாக்கி மகளிர் படையின் கனரக ஆயுதப் பிரிவை நீண்ட காலம் பொறுப்பேற்று சிறந்த முறையில் வளர்த்த கப்டன் சந்தியா....

மட்டுமே பங்குபற்றிக் கொண்டிருந்த மகளிர் படையணி வேவுபார்த்தலிலும் முன்னேற வேண்டுமென முனைப்புடன் நின்ற கப்டன் தேனுஜாவின் வழியில் சென்று தனித்து வேவுவேலையில் உற்சாகத்துடனும் ஊக்கத்துடனும் ஈடுபட்ட கப்டன் துளசிராம் கலா....

மேலும் ஆண் வேவுப் போராளிகள் வழிகாட்ட போருக்குப் போன காலம் போய், பெண் வேவுப் போராளிகள் வழிகாட்டபோருக்குப் போகும் இக்கால கட்டத்தில் வரலாற்றுப் புகழ் மிக்க பூநகரிச் சமரில் பெண் வேவுப் போராளிமுகுந்தாவின் குழு, ஆண் போராளிகளுக்கு வழி காட்டும் குழுவாகச் சென்றது. இந் நிகழ்வு பெண்களின் போர் வீரத்துக்கும் உறுதிக்கும் மேலும் சான்று கூறுகிறது.

விடுதலைப் புலிகளாகிய எமக்கும் எமது போராட்டத் துக்கும் பெரும் வெற்றியைத் தேடித் தந்த பூநகரிச் சமரில் எம்மை நோக்கி எல்லாப் பகுதிகளிலிருந்தும் துப்பாக்கி வேட்டுகள் தீர்க்கப்பட்டுக் கொண்டிருந்த போதும் தளராமல் உறுதியுடன் போரிட்ட போராளிகளின் குழுக்களையும் வழிநடத்தி, தாமும் நேரடியாக சுற்றி வளைப்புகளை முறியடித்துப் போராடி வெற்றிக்குப் பெரும் பங்கு வகித்த கப்டன்சுதர்சனா, மேஜர் வித்தியா....

யாழ் குடாநாட்டை துண்டாடும் நோக்குடன் ஆனையிறவுப் பகுதியிலிருந்து முன்னேறி வந்த இராணுவத் துடன் மிகமிக தீரத்துடனும் இலாவகத்துடனும் போரிட்டு குழுக்களை வழிநடத்தி இராணுவத்தை பின்வாங்கச் செய்து கவச வாகனங்களைக் கூட கைப்பற்றுவதற்கு உறுதுணை புரிந்த மேஜர் யாழிசை, மேஜர் சுகன்யா....

தனித்து தாக்குதல்களில்

இவர்கள் எல்லோரினதும் மாறுபட்ட, மிக வித்தியாசமான சாதனைகள் மகளிர் படையணியின் வளர்ச்சிப் போக்குக்கு ஒவ்வொரு படிப்பினைகளாகவும் உந்து சத்திகளாகவும் விளங்குகின்றன. இவர்களின் இந்தப் வழிகாட்டல்தான் விடுதலைப் புலிகள் மகளிர் படையணியை இன்றும் முன்னோக்கி வளர்த்துச் செல்வதில் பெரு பங்கு வகிக்கின்றது.''

"சிலாவத்துறை இராணுவமுகாம் தகர்ப்பு முயற்சியின்போது கப்டன் வானதியின் குழுவை பின் வாங்கும்படி கூறப்பட்டது. ''பலர் காயமடைந்துவிட்டனர். சிலர் வீரச்சாவடைந்து விட்டனர். இத்தனைக்கும் பின்னர் "நான் பின்வாங்க மாட்டேன்.மேலும் முன்னேறப்போகிறேன்'' என அசாத்தியத் துணிவுடன் முன்னேற முயன்ற கப்டன் வானதியின் மனோ வலிமையும், சொல்லிலடங்கா வீரமும், பின்னாட்களில் போராளிகளுக்கு பின்வாங்காமல் போரிட உந்துசக்தியாக விளங்கியது.''

...வேவுப் போராளிகள் வழிகாட்ட, போருக்குப் போன ... பெண்வேவுப் போராளிகள்வழிகாட்டபோருக்குப்போகும் ...த்தில், வரலாற்றுப் புகழ் மிக்க பூநகரிச் சமரில் பெண் ...ளி முகுந்தாவின்குழு, ஆண்போராளிகளுக்குவழிகாட்டும் ...ன்றது. இந் நிகழ்வு பெண்களின் போர் வீரத்துக்கும் ...மேலும் சான்று கூறுகிறது."

"பலாலி இராணுவ முகாமிலிருந்து வெளியேற முயன்றசிறீலங்கா இராணுவத்தை வெளியேற விடாமல் சுமார் நான்கு மணிநேரமாக பெண் போராளிகள் தனித்து நின்று போரிட்டு, எதிரிகள்பலரைவீழ்த்தி எம் 203 பிஸ்ரல் உட்பட வேறுசில ஆயுதங்களையும், ஒரு இராணுவத்தின் சடலத்தையும் கைப்பற்றி, பெண்கள் முதன் முதலாக தனித்துப் போரிட்டு ஆயுதம் எடுத்த சாதனையைத் தலைமையேற்று நிகழ்த்தி முடித்த பெருமை கப்டன் அஜித்தாவையே சாரும்."

... ஓடிவிடு ...தைத்தவர் ...ான் செய் ...ல் பெண் ...ர்களை ...இல்லை. ''நாங்கள் ...பாராடு ...ளை நாம் ...டியாது. ...வர்களை ...இன்பால் ...ண்டும்'' ... வாசகத் ...அவர்களின் ...க்கணித்து, ...வீரமான, ...கள் மூலம் ...ண்டிருக் ...மாக ஆரம் ...ராளிகளை ...தகமாக நோக்கிய மக்களின் பார்வை இப்போது பெரிதும் மாறுபட்டு விட்டது.''

''சராசரிப்பெண்களை விட பெண்போராளிகள் வேறுபட்ட வாழ்க்கையை வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். இதையிட்டு பெண் போராளிகளின் பெற்றோர்களின் நிலைப்பாடுகள் பொதுவாக எவ்வாறுள்ளன? இந்த வாழ்க்கையை பெண் போராளிகள் ஆரம்பித்தபோது அவர்கள் எவ்வாறு ஏற்றுக் கொண்டார்கள்?

''ஆரம்பத்தில் இப்பெற்றோர்களின் நிலைப்பாடு- தனது குடும்பம் தனது மகள், பாசம் என்ற வரையறைக்குள் கட்டுப்பட்டு நின்றதாலும், போய்விட்டது என நான் கூறமாட்டேன்''

''மகளிர் படையணியின் வளர்ச்சியிலே திருப்புமுனையை ஏற்படுத்திய பெண் போராளிகளையும் சம்பவங்களையும் குறிப்பிட முடியுமா?''

''மகளிர் படையணியின் வளர்ச்சிக்குப் பலபோராளிகள் திருப்புமுனைகளை ஏற்படுத்தியிருக்கிறார்கள். இருப்பினும் இதுவரைபெரிய அளவில் குறிப்பிடப்படாத சிலரையும், சம்பவங்களையும் இங்கு நான் குறிப்பிடுகிறேன்.

பலாலி இராணுவ முகாமிலிருந்து வெளியேற முயன்ற சிறீலங்கா இராணுவத்தை

ஆனையிறவுப் பெரும்சமரின்போது 'காவலரணைக் கைப்பற்றுவேன். இல்லாவிட்டால் திரும்பிவரமாட்டேன்' என்ற உறுதியுடன், காயமடைந்த பின்னும் மீண்டும் சென்று போரிட்டு வீரமரணத்தைத் தழுவிக் கொண்ட கப்டன் லீமா ....

''முதலாவது களத்தினிலே சிறிது பதட்டம்ஏற்பட்டாலும், எம்மை வழிநடத்தியவர்களால் அப்பதட்டம் போக்கப்பட்டதுடன், குறிபார்த்து தேவையானபோது மட்டும் சுட்டு, ரவைகளை அளவுடன் பயன்படுத்தவும் கற்றுக்கொண்டோம். எதிரியை அடித்துவிரட்டவேண்டும் என்ற உணர்வுடன்தான் நாமெல்லாம் இயக்கத்தில்இணைந்துகொண்டோம் என்பதால், எதிரியை எதிர் கொள்ளும் மனோவலிமை ஏற்கனவே எம்மிடம் இருந்தது. எதிர்கொள்ளும் ஆற்றலையும்,தந்திரோபாயங்களையும் காலப்போக்கிலே பெற்றுக்கொண்டோம்''



மேஜர் சுகன்யா



மேஜர் யாழிசை

# நிமிர்ந்து நில்லுங்கள்

ராஜ கிராமம்!

எமது இரண்டாவது கிராமியப் பாசறை நடாத்தப்பட்ட சிறு கிராமம். வடமராட்சியில், நெல்லியடியிலிருந்து ஏறத்தாழ 300-400 யார் தொலைவில் அமைந்துள்ள ராஜ கிராமம், அயலிலுள்ள ஏனைய கிராமங்களோடு ஒப்பிடுகையில் மிகவும் பின்தங்கிய நிலையிலுள்ள ஒரு பகுதி.

கல்வியறிவோ, அதைப் பெற்றுக்கொள்ளவேண்டும் என்பதோ, சுகாதாரமோ, நல்ல வேலை வாய்ப்புக்களோ, சேமிப்புப் பழக்கமோ இல்லாத இவர்களை, ஏனைய முன்னேறிய பகுதிகள்போன்று வளர்த்துவிடும் நோக்கில் கடந்த சில மாதங்களாக எமது இயக்கம் இக்கிராமத்தை ஆய்வு செய்து இங்குள்ள பிரச்சினைகளை இனங்கண்டுகொண்டது. அப் பிரச்சினைகளுக்குரிய தீர்வுகளை நடைமுறைப் படுத்தும் நோக்கோடு 1994.02.15 அன்று எமது இயக்கத்தின்அரசியற்றுறை தனது நடவடிக்கைகளை அங்கே ஆரம்பித்தது.

சாதியம் மிக ஆழமாக வேரோடியுள்ள இக் கிராமத்தில் பெண்களின் நிலையைக் கேட்டறிந்துகொள்ளும் நோக்குடன் நாம் பெண்களை அணுகினோம். அவர்கள்பல விடயங்களைக் கூறினார்கள்.

ஏறத்தாழ இருபது வருடங்களின் முன் (அப்போது சாதியம் மிக உச்ச நிலையில் இங்கு பேணப்பட்டது) சாதியில் உயர்ந்தவர்கள் என்று தம்மைக் கூறிக்கொண்டவர்களால் சாதியில் குறைந்தவர்கள் என்று கருதப்பட்ட மக்கள் உடலின் மேற்பகுதியை மூடி ஆடை அணிவதற்கு அனுமதி இருக்கவில்லை. ஆண்கள் சட்டை போடுவதோ, பெண்கள் சேலையைத் தோளில் அணிவதோ வழக்கத்திலில்லை. குறைந்தசாதியினர் என்று கருதப்படுபவர்களுள் யாராவது இந்த வழக்கத்தை மீறினால், தம்மைச் சாதியில் உயர்ந்தோர் என்று கூறிக்கொள்பவர்களால் தண்டனைக்கு உள்ளாக்கப்பட்டார்கள்.

ஒருமுறை, குறைந்த சாதியினர் என்று கருதப்பட்ட மக்களில் புதிதாக மணம் செய்துகொண்ட இளம் பெண்ணும் வாலிபனும் கோயிலுக்குப் போனார்கள். அந்தப் பெண் சேலையைத் தோள் வரை அணிந்திருந்தாள். உயர்ந்த சாதியினர் என்று தம்மைச் சொல்லிக் கொள்பவர்கள் இதைக் கவனித்து விட்டு,

''இவள் என்ன நம்மைப்போல் சேலை அணிந்திருக்கிறாள்?''

என்று கோபம்கொண்டு, அப்பெண்ணைக் கோயிலிலேயே சேலையைக் கழற்றுமாறு பணித்தனர். அவ்வாறு சேலையைக் கழற்றியபின், கணவனின் வேட்டியைக் கழற்றி அவளைக் கட்டுமாறு பணித்தனர். சேலையணிந்து தன் கணவனுடன் கோயிலுக்கு வந்த அவள், கணவனின் வேட்டியை அணிந்து வெளியே செல்லுமாறு நிர்ப்பந்திக்கப்பட்டாள்.

இச் சம்பவத்தின் எதிரொலியாக அவ்வூரிலே கலவரம் மூண்டது. மூவர் கொல்லப்பட்டனர். குறைந்த சாதியினர் எனக் கருதப்பட்டவர்கள் மிகக் கடுமையாகத் தாக்கப்பட்டனர். இதனால் பயங்கொண்ட அம்மக்கள் வெளியே வரப் பயத்தில் வீட்டுக்கு உள்ளேயே இருந்து, உணவின்றி சிலர் இறந்துபோயினர்.

ஒரு பாட்டியுடன் நாம் கதைத்தபோது அவர்;

''அவங்கட (உயர் சாதியினர் என்று தம்மைக் கூறிக்கொள்வோர்) வீட்டிலை நல்லது, கெட்டது எது நடந்தாலும் நாங்க போய்க் கூட்டித் துப்பரவு செய்யவேணும். அதுக்குக் கூலியாக் கொஞ்சம் சோறு தருவாங்கள்'' என்றார்.

சிரட்டை, பேணி போன்றவற்றில்தான் உணவும் தேநீரும் கொடுக்கப்பட்டன.

உயர் சாதியினர் என்று கருதப்பட்டவர்கள் எதிரே வந்தால், அவர்கள் தமது தோளில் போட்டுள்ள துண்டைக் கையில் எடுத்து, குனிந்து மரியாதை செய்த நிலைகூட ஒரு காலத்தில் அங்கு இருந்தது என அப் பாட்டி தெரிவித்தார்.

இங்குள்ள பெண்கள் பெரும்பாலும் அரிசி இடித்தல், எட்டு ஒன்பது மைல்கள் தூரம் நடந்துசென்று மீன்களை வாங்கி வந்து நெல்லியடிச் சந்தையில் விற்றல் போன்ற வேலைகளையே செய்கின்றார்கள். மீன் விற்பனையில் சில வேளைகளில் இலாபம் கிடைப்பதுமுண்டு. முதல்கூடக் கிடைக்காமல் போவதுமுண்டு.

பெரும்பாலும் பெண்களின் உழைப்பில்தான் குடும்பவண்டி நகர்கிறது. குடும்பத் தலைவர் உழைப்பவராக இருந்தாலும்கூட அவரின் வருமானம் முழுமையாகக் குடும்பத்துக்குக் கிடைப்பதில்லை. வெறிக் குடிவகை விற்பனை நிலையங்களுக்குத்தான் அவரின் வருமானத்தின் பெரும் பகுதி போய்ச் சேர்கின்றது.

இந்த விடயம்பற்றி ஒரு மாணவியிடம் கதைத்தபோது.

''பின்னேரம் அஞ்சு, ஆறு மணியெண்டா ஊர் சண்டைக்குத் தயாராக இருக்கும். ஒரே அடிதடிதான். படிக்கக்கூட நிம்மதியில்லை'' என்றார்.

குடும்பத்தில் தாய், தந்தை இருவருமே உழைப்பவர்களாக இருந்தால் பெண் பிள்ளைகள் பாடசாலைகளிலிருந்து நிறுத்தப்பட்டு, குழந்தைப் பராமரிப்பில் ஈடுபடுத்தப்படுகின்றாள். அப்படி எந்தப் பிரச்சனையுமில்லாமல் அங்குள்ள பாடசாலையில் க. பொ. த [சா/த] வரை படித்துச் சித்தியடைந்தாலும் ஊருக்கு வெளியே போய் உயர் படிப்புப் படிக்கும் வசதி கிடைப்பதில்லை.

## பொன்னிலா

இம்மக்கள் பெரும்பாலும் கல்வியறிவு குறைந்தவர்களாக இருப்பதால், சுகாதார நடைமுறைகள் எதையுமே இவர்கள் பின்பற்றுவதில்லை. பிறக்கும் குழந்தைகளுக்குத் தடுப்பூசி போட வேண்டும் என்ற விடயம்கூடத் தெரியாத பரிதாபநிலையால், நோய்கள் பலவற்றால் பீடிக்கப்பட்டுள்ளார்கள். வயது வந்த பெண், ஆண் இரு பாலருமே இளம்பிள்ளைவாத நோயால் பாதிக்கப்பட்டுள்ளதைக் காணக்கூடியதாக இருந்தது. 'தாண்டித் தாண்டி நடந்தால் பழிப்பார்கள்' என்ற கூச்சத்தில் பல இளம் பெண்கள் வீட்டினுள் முடங்கிக் கிடந்ததை அவதானிக்கக்கூடியதாக இருந்தது.

இந்நோயால் பாதிக்கப்பட்ட ஒரு பெண்ணோடு கதைத்தபோது,

''எங்கட அம்மா, அப்பா படிக்காததாலைதான் எங்களுக்கு இந்த நிலை. எங்களுக்குப் பிறகு வளருற பிள்ளையளுக்கு இதுமாதிரி வரக்கூடாது'' என்றார் கண்ணீருடன்.

பொருளாதாரம் நல்ல நிலையில் இல்லாததால் பெரும்பாலும் பெண்கள் சிறுவயதிலேயே மணமுடித்துக் கொடுக்கப்படுகின்றார்கள். பல பெண்கள் இளம் வயதில் தாமாகவே விரும்பி, குடும்பத்துக்குத் தெரிவிக்காமலேயே மணம் செய்து விடுகின்றனர். அறியாமை காரணமாக இப் பெண்கள் தமது திருமணங்களைத் பதிவு செய்வதில்லை. அதனால் கணவன்மார் திடீரென்று விட்டுப் பிரிந்தவுடன் கைக் குழந்தையுடன் தனியாக நடுத்தெருவில் நிற்கும் அவலத்துக்கு ஆளாகின்றனர்.

இவ்வாறு பல சிக்கல்களுக்கு முகம் கொடுத்தபடி, சிக்கல்களுள் அமிழ்ந்தபடி, அவற்றுள்ளிருந்து நிமிர முயன்றபடி வாழும் பெண்களுக்குத் தோள் கொடுத்து உயர்த்தி, அவர்களுடைய பலத்தை உணரச் செய்து, தம் காலிலேயே நிற்கும் மனவலுவை உருவாக்கும் பொருட்டு விடுதலைப் புலிகள் மகளிர் அமைப்பால் சில திட்டங்கள் முன்வைக்கப்பட்டு, அவற்றைச் செயற்படுத்துவதற்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. அவை,

★ கணவனால் கைவிடப்பட்ட, இராணுவ நடவடிக்கைகளால் பாதிக்கப்பட்ட, கணவனை இழந்த ஆதரவற்ற பெண்களுக்கு வேலை வாய்ப்புக்களை வழங்கல்.

★ கல்வியறிவு குறைந்த, வேலையற்ற, வீட்டிலுள்ள பெண்களுக்கு சுய தொழில் வாய்ப்புக்களை வழங்கல்.

★ பெண்களுக்கான விளையாட்டுக்கழகத்தை ஆரம்பித்தல்.

★ மாதர் சங்கங்களை அமைத்தல் என்பனவாகும்.

இவற்றைவிட யாழ் மாவட்ட அரசியற்றுறையினராலும், தமிழீழப் பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தாலும் பல திட்டங்கள் முன் வைக்கப்பட்டு, அவற்றைச் செயற்படுத்துவதற்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

நாம் இங்கு எதிர்பார்ப்பது பெண்களுக்குத் தம் நிலையைப்பற்றிய விழிப்பு ஏற்படவேண்டும் என்பதையே.

---

(11 ஆம் பக்கத் தொடர்ச்சி)

## பெண்ணியம்

வியட்னாம், ஈரான், இந்தோனேசியா போன்ற நாடுகளில் பெண்களைச் சமூகத்தினின்றும் ஒதுக்கி வைத்தல், சீனாவில் பாதங்கட்டுதல் போன்றவை பெண் ஒடுக்குமுறையின் தெளிவானவடிவங்களாக முனைப்படுத்தப்பட்டன. அதேநேரம் தாய்வழி ஆட்சியின் எச்சங்கள், பாலியல் சகிப்புத்தன்மை, பல கணவருடமை, பரஸ்பர புரிந்துணர்வின் அடிப்படையிலான விவாகரத்துப் போன்றவை ஆட்சியாளரினதும், மதவாதிகளினதும் கடும் விமர்சனத்துக்குள்ளாகியது. இக்காலத்தில் பெண் தொடர்பான சீர் திருத்தங்கள் சமூகத்தின் அடிப்படைக் கட்டமைப்பை மேலும் பலப்படுத்துவதற்கு, பயன்பட்டதேயொழிய, உண்மையில் பெண்ணிலை தொடர்பான மாற்றத்தை ஏற்படுத்த உதவவில்லை.

முதலாளித்துவம் ஒருபுறம் வறிய உழைக்கும் வர்க்கப் பெண்களை வீட்டிலிருந்து வெளியே வந்து தொழிற்சாலைகளுக்கு கூலி உழைப்பாளராகச் செல்லும் வசதியை வளர்த்துவிட்ட அதேசமயம், இன்னோர் புறத்தில் நடுத்தர வர்க்கப் பெண்களை முதலாளித்துவத்தின் உற்பத்திப் பொருளான நடுத்தர வர்க்க ஆண்களுக்கு வீட்டுக்குள்ளே, வீட்டுமனைவியராக, மேற்கத்தைய நாகரிகத்தைப் பின்பற்றியவர்களாகப் பயிற்றுவித்தது. இப் பெண்கள் பழைய சமூகத்தில் பிற்போக்கானவை எனக் கருதப்பட்ட குடும்ப மரபுகள் ஆகியவற்றின் காவலராகவும் இருக்க வேண்டியிருந்தது. அதாவது ஒரே சமயத்தில் நவீனமயப்பட்டவராகவும், மரபாளராகவும் இருக்க வேண்டியிருந்தது. பெண் விடுதலை தொடர்பான புதிய உணர்வுகளில் மேற்குலக சிந்தனைகளின் தாக்கத்தை இங்கன் என்பவரது 1879 இல் எழுதப்பட்ட 'பொம்மை வீடு' என்ற நாடகம் தெளிவாகப் பிரதிபலிக்கின்றது. இதில் நோறா என்ற பெண் மரபு ரீதியான தடைகளை உடைத்தெறிவதற்கு போராடுகின்ற குறியீட்டு வடிவமாகவும், அதேநேரம் மரபிலிருந்து வழுவாத ஒழுக்க நிலையைக் கொண்டவளாகவும் சித்தரிக்கப்படுகிறாள்.

பெண்களுக்கு வழங்கப்பட்ட கல்விகூட நல்ல திருமணம் ஒன்றைச் செய்வதற்கு ஏற்றவகையில் பெண்களைப் பயிற்றுவிப்பதனையே அடிப்படையாகக் கொண்டிருந்தபோதும் கூட, கல்வி வாய்ப்புக்களினால் நன்மையடைந்த ஒரு சாரார் பெண்களை கீழ் நிலையில் வைத்திருக்க, உதவுகின்ற சமூகப் பழக்க வழங்கங்கள், பொருளாதாரசட்ட அரசியல் முறைமைகள் ஆண்களைச் சார்ந்தவர்களாக இருக்க வேண்டிய மரபுகள் போன்றவற்றிலிருந்து பெண்களை விடுதலை பெறச் செய்யவேண்டும் என்பதில் ஆர்வங்காட்டினர். கல்வி, எழுத்தறிவு என்பவற்றின் பரவலுடன் பெண்ணியம் சார்ந்த இலக்கியங்கள், நூல்கள், பருவ இதழ்கள் என்ற வடிவில் தோற்றம் பெற்றதுடன் ஆண் நாவலாசிரியர்கள், கவிஞர்கள், இதழாளர்கள் போன்றோரும் பெண்கள் பற்றிய படைப்புக்களைக் கொண்டிருந்தனர். இத்தகைய வளர்ச்சி நிலையில் நடுத்தரவர்க்கப் பெண்கள் தேசிய இயக்கங்களில் இணைந்து, பெண்களின் சமூக உயர்வுக்குப் பங்காற்றிக் கொண்டிருக்க, உழைக்கும் வர்க்கப் பெண்களோ காலனித்துவ அமைப்புக்குள் தாம் சுரண்டப்படுவதை உணர்ந்து, தமது பொருளாதார உரிமைகளைப் பெறும் பொருட்டு முதலாளித்துவ அமைப்புக்குள்ளே ஏகாதிபத்தியத்திற்கெதிராகப் போர்க்கொடி தூக்கினர்.

1960, 1970 களில் தோற்றம் பெற்ற பெண்விடுதலை இயக்கங்கள் பெண்ணியத்தின் இரண்டாவது அலை எனப்படுகின்றது. இவை பொதுவாக ஏகாதிபத்திய எதிர்ப்பிலிருந்து விடுதலையடையும் பொருட்டு மேற்கொள்ளப்பட்டு வரும் தேசியவிடுதலைப் போராட்டத்துடன் இணைந்ததாகக் காணப்படுவதை அவதானிக்கலாம். 1977ல் தோற்றம் பெற்ற நிக்குவராயின் 'Amproc an' என அழைக்கப்பட்ட பெண்கள் அமைப்பு( இது பின்பு Am nlae எனப்பெயர் மாற்றம் செய்யப்பட்டது), 1978ல் கல்வடோரின் 'Am es', பாலஸ்தீனத்தின் 'Gupw', ஆபிரிக்க தேசிய காங்கிரசின் 'Bantu women leaguc'' எரித்திரியாவின் Eplt', தமிழ் ஈழத்தில் விடுதலைப் புலிகள் மகளிர் அமைப்பு என்பவற்றைக் குறிப்பிடலாம். குறிப்பாக 1970 களிலிருந்து வரலாற்றில் தமது அடையாளங்களைச் சிறப்பாக பதித்துக் கொண்டிருக்கும் சர்வதேச பெண்கள் இயக்கத்தின் வளர்ச்சியுடன் இணைந்து தேசிய விடுதலைக்காகப் போராடும் மூன்றாம் உலக மக்களின் குரல் பலமடைந்து கொண்டிருக்கின்றது. அரசியல் அரங்கில் தேசிய விடுதலைப் போராட்டத்துடன் இணைந்து பெண்கள் விடுதலையானது ஒரு திருப்பு முனையாக கருதப்படுவது மட்டுமன்றி, இது தற்போதைய அறிவுசார் ஆய்வுகளுக்கான சிறப்புப் பகுதிகளாகவும் கருதப்படுவதை அவதானிக்கலாம்:

---

## துரோகியின்

(12-ம் பக்கத் தொடர்ச்சி)

விடிந்ததும் .. உனது மகன் – சக்கரவர்த்தி''

மகன் பெருமிதத்துடன் உரைக்கிறான்.

அவளோ அவனை ஏறெடுத்துப் பார்க்கிறாள்.

''வா மகனே சற்றுநேரம் என் தோள்களில் சாய்ந்து ஓய்வெடுத்துக்கொள். உனக்கு நினைவிருக்கிறதா? நீ சிறுவனாக இருக்கையில் தினமும் இப்படித்தான் படுத்துக் கொள்வாய்.''

அவன் தாயின் தோள்களில் சாய்ந்து கொள்கிறான்.

''அம்மா! நான் உனக்கு நன்றி சொல்கிறேன். நீதானே என்னை இப்படி ஒருவீரனாக வளர்த்தெடுத்தாய்''

அவளது நெஞ்சில் சுரீரென ஒரு வலி. ஓசையின்றி மகனின் இடுப்புப் பட்டியில் செருகப்பட்டிருந்த குறுவாளை உருவி, பற்களை இறுகக் கடித்தபடி அவனது இதயத்திற்குள் தன்னால் முடிந்தளவு வேகத்துடன் செலுத்தினாள்.

திடுக்கிட்டுத்திறந்த விழிகளில் ஆச்சரியமும் திகைப்பும் அகலுமுன்

(2-ம் பக்கம் பார்க்க)

மத்தியான வெய்யில் நெருப்பாய்க் கொழுத்திக் கொண்டிருக்குது. தார் ரோட்டிலே கால்வச்ச உடனேயே நான் துடிச்சுப் போறன். இந்த வெயிலுக்குள்ளாலை நடந்துபோய் பேத்தியைப் பார்க்கவேணுமோ. எண்டு நினைச்சுக்கொண்டு நான் படலையடியிலை பேசாமல் இருக்கிறன்.

இந்த வெயிலைப் பாக்கேக்கை எனக்கு என்ரை பேத்தியின்ரை ஞாபகம் வருகுது. இப்பிடி எத்தினை வெயிலுக்கை காஞ்சு காஞ்சு அவளும் போராடுகிறாள் எண்டதை யோசிச்சுப் பாக்கேக்கை இது பெரிய வெயிலோ எண்டு நான் நினைக்கிறன்.

வெத்திலையை வாய்க்குள்ளை போட்டுக் குதப்பிக் கொண்டு, கூன் விழுந்த முதுகை இன்னும் நல்லாய்க் கூனிக்கொண்டு நான் எழும்பி தெருவிலை நடக்கிறன்.

இப்ப உந்த மரத்துக்குக்கீழை, அடுத்த பக்கத்திலை சின்ன ராசன்ரை தேத்தண்ணிக் கடை சனத்தாலை நிரம்பி வழியிறது எனக்குத் தெரியுது.

இந்தியன் ஆமி வாகனங்களிலை ஓடித் திரியேக்கை பேத்தியும் அவளின்ரை ஆக்களும் இந்த மரத்துக்கு மேலை

திக்கு முன்னாலை நானெல்லாம் வெறும் தூசெண்டு நினைச்சுக்கொண்டு நான் பெருமூச்சு விடுறன்.

பெரிய இரைச்சலோடை வந்த ஒரு வாகனம் என்னை விலத்திக்கொண்டு போகுது. அந்த வாகனத்தின்ரை புகை

விலை பட்டப்பகல்லை ஒரு மானபங்கம் நடக்குது.

அவன் சைக்கிள் ஓடி ஓடி பின்னாலை திரும்பி அவளைப் பாத்து என்னவோ சொல்லிச் சிரிக்கிறான். அவள் பயந்து போய் கண்ணை உருட்டி, உருட்டி அங்காலையும் இஞ்சாலையும் பாத்துக்கொண்டு,

**1994. 03. 08 இல் நடந்த அனைத்துலகப் பெண்கள் நாளை முன்னிட்டு விடுதலைப் புலிகள் மகளிர் அமைப்பால் நடாத்தப்பட்ட இலக்கிய, ஓவியப் போட்டிகளில் முதலிடம் பெற்ற சிறுகதை.**

ஒளிச்சு, ஒருநாள் முழுக்க ஏறியிருந்தது எனக்கு ஞாபகம் வருகுது. அண்டைக்கு பேத்தி இதை சாதாரணமாய் சொல்லேக்கை நான் நடுங்கிப் போனேன்.

''உந்த மரத்திலையோ... முத்தர் அம்மான்ரை மூத்த

என்ரை முகத்திலை அடிக்க, நான் விலத்தி இருக்கிறன்.

இந்த புளியமரத்துக்குக் கீழை கால் இரண்டையும் நீட்டி ஆறுதலாய் இருந்து கொண்டு தூரத்திலை வாற வாகனங்களை நான் பாத்துக் கொண்டிருக்கிறன். மண்

என்ன செய்யுறதெண்டு தெரியாமல் தவிச்சுப்போறாள். பூனைக்கு விளையாட்டு, சுண்டெலிக்கு சீவன் போகுது.

எல்லாத்தையும் பாத்துக் கொண்டிருந்த எனக்கு புண்ணிலை புளி பத்தினமாதிரி ஆத்திரம் உச்சிக்கு ஏறுது.

# பள்ளி எழுந்திடுவீரே!

என்னை விலத்திக்கொண்டு சைக்கிள்களும், வாகனங்களும் போய் வருது. மாட்டு வண்டியிலை விறகு கொண்டு போறமாதிரி சைக்கிள்ளை விறகு கட்டிக்கொண்டு போற

வனின்ரை ஆவி சுத்துற மரத்திலையோ ?'' எண்டு நான் பயந்து கொண்டு கேக்கேக்கை, பேத்தி அடக்கமாட்டாமல் விழுந்து விழுந்து சிரிச்

**பேத்தியை, அவளின்ரை நடைமுறையைப் பாக்கேக்கை, எனக்கு மூக்கிலை விரலை வைக்கவேணும் போல கிடக்கு. சண்டையைப்பற்றி, தங்கடை வாழ்க்கையைப்பற்றி அவள் கதை கதையாய்ச் சொல்லேக்கை, 'இது என்ரை பேத்திதானோ' எண்டு நான் ஆச்சரியப்பட்டுப்போறன். எனக்கு அவள் புத்தி சொல்லேக்கை ஒவ்வொரு விசயத்துக்கும் வழிகாட்டேக்கை 'இவளுக்குத்தானோ நான் தலை இழுத்து, பொட்டுப் போட்டு வடிவு பாத்தன்' எண்டு நான் திகைச்சுப் போறன்.**

ணெண்ணைப் புகையைக் கக்கிக்கொண்டு போற வாகனங்களையும், விறகுகளோடை போற சைக்கிள்களையும், விறகில்லாமல் வாற சைக்கிள்களையும் பாத்துக் கொண்டிருந்த நான் ஒருக்கா திடுக்கிட்டுப் போறன்.

ஒருத்தன் சைக்கிள் ஓடிவாறான். எல்லாரும் ஒரு பக்கமாய், நேராய் ஓடிவரேக்கை அவன் மட்டும் அங்காலையும் இஞ்சாலையும் வளைஞ்சு வளைஞ்சு ஓடிவாறான். அந்த சைக்கிளோட்டத்தைப் பாக்க எனக்கு ஆத்திரம் வருகுது.

நடுரோட்டிலை இப்பிடியோ சைக்கிள் ஓடுறது எண்டுநான் நினைக்கிறன்.

நான் பாத்துக்கொண்டிருக்கேக்குள்ளேயே அந்த சைக்கிள் காரன் சினிமாப் படங்களிலை வாறமாதிரி அந்தப் பக்கம் போறதும், இந்தப் பக்கம் வாறதுமாய் ஓடிக்கொண்டு

அந்தக் காலத்திலை தண்ணி எடுக்குறதுக்கு நான் குடம் கொண்டு போகேக்கை வடிவேலற்றை கடைசிப் பொடியன் பின்னாலை வந்து காதுக்கை எம். ஜி. ஆற்றை காதற்பாட்டைப் பாடிப்போட்டு போவான்.

அப்ப எனக்கு ஆத்திரம் வரும். கையிலை கிடக்கிற குடத்தைத் தூக்கி அவனுக்கு எறிய வேணும் போலைகிடக்கும். ஆனால் நான் ஒண்டும் பேசமாட்டன். வீட்டுக்குள்ளாலை வெளிக்கிட்டுத் தெரியாக் காலத்திலை, ஊர் உலகம் புரியாத காலத்திலை நான் பேசாமல் போனன் எண்டால், இப்பவும் பேசாமல் போறதோ? இது பேத்தியின்ரை காலமெல்லோ...?

நான் எழும்புறன். விறுவிறெண்டு ஓடிப்போய் அவன்ரை சைக்கிளை இறுக்கிப் பிடிக்கிறன்.

அவன் திகைச்சுப்போறான். கூன் விழுந்து தடதடத்துப் போன என்னைப் பாத்து நடுங்கிப் போறான்.

எனக்கு ஆத்திரம் வருகுது. அவன் பயப்பிடுகிறதைக் கண்டு எனக்கு எரிச்சல் வருகுது. எதிர்த்துக் கேட்க மாட்டினம் எண்ட துணிவிலை தானே இவங்கள் இப்பவும் தெருவிலை சேட்டை விடுகிறாங்கள் எண்டு நான் கொதிச்சுப் போறன்.

இவனுக்கு நான் புத்தி சொல்லவேணும். நடுத்தெருவிலை இப்படி ஒருத்தியோடை பகிடிவிடுறது அவளின்ரை மானத்தையே பறிக்கிறமாதிரி எண்டதைப் புரியவைக்க வேணும்.

நான் சைக்கிள் கைபிடியை விடாமல் இறுக்கிப் பிடிச்சுக் கொண்டு அவனை நிமிர்ந்து பாக்கிறன்.

வாயிலை வந்தபடி அவனைத் திட்டுறன்.

''தெருவிலை இப்பிடிப் பகிடி விடுறதாலை ஒருத்தியின்ரை மனம் எந்தளவுக்குத் துன்பப்படுது எண்டது உனக்குத் தெரியுமோ? அவளின்ரை மன உணர்வுகளை எந்தளவுக்கு நீ சிதைக்கிறாய் எண்டது உனக்கு விளங்கேல்லையோ? இனிமேலும் இண்டைக்கு மாதிரிச் சேட்டை விட்டாய் எண்டால், என்ரை பேத்தியைக் கொண்டு உனக்கு செய்யக்கூடாத வேலையைச் செய்விப்பன்'' எண்டு நான் அவனை வெருட்டுறன்.

அவன் ஒண்டும் பேசாமல் நிக்கிறான். இவனுக்கு இவ்வளவும் காணும் எண்டு நினைச்சுக்கொண்டு நான் சைக்கிள்ளை இருந்து கையை எடுக்கிறன். அவன் சைக்கிளை மிதிச்சுக்கொண்டு வேகமாய் போறான். திரும்பிப்பாக்காமல் வேகமாய் ஓடுறான், அவன் போறதையே பார்த்துக்கொண்டு நிண்ட நான்

**இவளுக்கு என்ரை பேத்தியின்ரை வயதுதான் வரும். ஆனால் பேத்திக்கும் இவளுக்கும் கனக்க வித்தியாசம். என்ரை பேத்தியெண்டால், இப்பிடி ஒருத்தன் பின்னாலை துரத்திக்கொண்டு வரேக்கை, சும்மா பாத்துக் கொண்டு வருவாளோ? உந்த ஆமிக்காரனையே வெருட்டிக்கொண்டு நிக்கிறவள், இவனைச் சும்மா விடுவாளோ?**

வையாலை தெரு பெரிசாய் அமர்க்களப்படுது. சுமையை மறக்க தெருவிலை கும்மாளம் போடுகினம்போலை.

திருவிழாவுக்கு நிறையிற மாதிரி சனம் நிறைஞ்சு போயிருக்கிற இந்த தெருவைப் பாக்கேக்கை, முந்தி இந்தத் தெரு இருந்த நிலை எனக்கு ஞாபகம் வருது. பஸ், ரெயின் ஓடுற காலத்திலை இந்தத் தெருவை, இதுக்கு அங்காலையும் இஞ்சாலையும் பரந்து கிடக்கிற பெரிய வெளியை, உந்தப் பனைமரங்களை அப்ப ஒருத்தருக்கும் தெரியாது. உந்த வெளிக்குள்ளை உப்பு விளையுற காலத்திலை உப்பு அள்ள வாறவையாலைதான் எப்பவாவது இந்தத் தெரு நிறைஞ்சு போகும். இப்ப உள்ள வாகனமெல்லாம் இந்த தெருவிலைதான்ஒடுற மாதிரிக் கிடக்கு. தெருவாலை போற வாற ஒவ்வொருத்தருக்கும் தெருவிலை கிடக்கிற ஒவ்வொரு பள்ளமும் இப்ப மனப்பாடம் மாதிரி.

நான் கனதூரம் நடந்து வந்திட்டன். கால் இரண்டும் சோர்ந்து போனது மாதிரித் தொங்க, இந்த புளியமரத்துக்குக் கீழை ஆறுதலாய் இருக்கிறன். கால் இரண்டையும் தடவிவிட்டுக் கொண்டுதெருக் கரையோடை நிக்கிற இந்தப் பெரிய புளியமரத்தை நான் வடிவாய்ப் பாக்கிறன்.

முந்தி. முத்தர் அம்மான்ரை மூத்தவன் இந்த மரத்திலை தூக்குப்போட்டு செத்தபிறகு ஒருத்தரும் இந்த மரத்துக்குக் கிட்ட வாறதில்லை. அவனின்ரை ஆவி இதிலை சுத்திக் கொண்டிருக்கும் எண்டுபயம்.

சது எனக்கு இப்பவும் கண்ணுக்கை தெரியுது.

பேத்தியை, அவளின்ரை நடைமுறையைப்பாக்கேக்கை எனக்கு மூக்கிலை விரலை வைக்கவேணும் போலை கிடக்கு. சண்டையைப்பற்றி, தங்கடை வாழ்க்கையைப் பற்றி அவள் கதை கதையாய் சொல்லேக்கை, 'இது என்ரை பேத்திதானோ' எண்டு நான் ஆச்சரியப்பட்டுப்போறன். எனக்கு அவள் புத்தி சொல்லேக்கை, ஒவ்வொரு விசயத்துக்கும்வழிகாட்டேக்கை, 'இவளுக்குத்தானோ நான் தலை இழுத்து, பொட்டுப் போட்டு வடிவு பாத்தன்' எண்டு நான் திகைச்சுப் போறன்.

## வேணி சின்னத்தம்பி

வாறான். நான் நல்லாய் அவனையே உத்துப் பார்த்துக் கொண்டிருக்கிறன்.

அவனுக்குப் பின்னாலை இப்ப எனக்கு ஒரு நீலச்சட்டை தெரியுது. அந்த நீலச்சட்டை போட்டவள் அவனுக்குப் பின்னாலை சைக்கிளோடிவாறாள். அவள் சைக்கிளை வேகமாய் மிதிக்க, அவனும் விடாமல் வேகமாய் ஓடுகி

**அந்தக் காலத்திலை தண்ணி எடுக்குறதுக்கு நான் குடம் கொண்டு போகேக்கை, வடிவேலற்றை கடைசிப்பொடியன் பின்னாலை வந்து காதுக்கை எம். ஜி. ஆற்றை காதற்பாட்டைப் பாடிப்போட்டு போவான்.**

**அப்ப எனக்கு ஆத்திரம் வரும். கையில் கிடக்கிற குடத்தைத் தூக்கி அவனுக்கு எறிய வேணும் போலை கிடக்கும். ஆனால் நான் ஒண்டும் பேசமாட்டன். வீட்டுக்குள்ளாலை வெளிக்கிட்டுத் தெரியாக் காலத்திலை, ஊர், உலகம் புரியாத காலத்திலை நான் பேசாமல் போனன் எண்டால், இப்பவும் பேசாமல் போறதோ? இது பேத்தியின்ரை காலமெல்லோ ___ ?**

அந்தக் காலத்திலை பேத்தியின்ரை வயதிலை நானெல்லாம் என்னத்தைச் சாதிச்சுப் போட்டன்?

வீட்டுக்கை இருந்து,பிள்ளையளைப் பெத்து, சமைச்சுப் போட்டதைத் தவிர வேறை என்னத்தை சாதிச்சன்? பேத்

றான். அவள் மெதுவாய் ஓட அவனும் சட்டெண்டு பிரேக் பிடிச்சு மெதுவாய் ஓடுறான்.

ஓ... எனக்கு இப்பத்தான் விசயம் விளங்குது.

என்ரை பேத்தி அடிக்கடி சொல்லுறமாதிரி நடுத்தெரு

தெருவாலை போறவாறவை அவன் அவளை வெருட்டுறதையும், அவள் பயந்து சாகிறதையும் பார்த்துக்கொண்டு பேசாமல் போகினம்.

''பொடியன் உப்பிடித்தான்...'' எண்டு நினைச்சினமோ, இல்லையெண்டால் ''உதெல்லாம் பகிடிக்குத்தானே '' எண்டு நினைச்சினமோ தெரியேல்லை. கண்ணுக்கு முன்னாலை ஒருத்தி கேவலப்படுத்தப்படுறதைப் பார்த்துக்கொண்டு எல்லாருமே பேசாமல் போகினம்.

என்னாலைமட்டும் இந்தப் புளியமரத்துக்குக் கீழை கையைக் கட்டிக்கொண்டு, இவன் துரத்துறதையும், அவள் துடிச்சுப் போறதையும் பாத்து ரசிச்சுக் கொண்டிருக்க முடியேல்லை.

என்ரை பேத்தியெண்டால் உதைப் பாத்துக் கொண்டு சும்மா இருப்பாளோ? உந்தச் சேத்துக்குள்ளை அவனைத் தூக்கிப் போட்டுக் குளிப்பாட்டமாட்டாளோ?

நானும் எல்லாரையும் போலை பேசாமல் பார்த்துக் கொண்டிருந்தன் எண்டால், அந்தப் பேத்திக்கு நான் ஆச்சியாய் இருக்கிறதிலை அர்த்தமில்லையெல்லோ?

அவன் தெருவிலை மறைஞ்சாப் பிறகு அவளிட்டைத் திரும்புறன்.

அவள்-அந்த நீலச்சட்டைக் காரி- என்னைப் பாத்து நன்றியோடை சிரிக்கிறாள். நான் அவளைப் பார்க்கிறேன்.

இவளுக்கு என்ரை பேத்தியின்ரை வயதுதான் வரும். ஆனால் பேத்திக்கும் இவளுக்கும் கனக்க வித்தியாசம். என்ரை பேத்தியெண்டால் இப்படி ஒருத்தன் பின்னாலை துரத்திக்கொண்டு வரேக்கை சும்மா பாத்துக் கொண்டு வருவாளோ? உந்த ஆமிக்காரனையே வெருட்டிக்கொண்டு நிக்கிறவள் இவனைச் சும்மா விடுவாளோ?

எனக்கு அவளைப் பாக்க ஆத்திரம் வருகுது. இவள் இப்படி நசிஞ்சு கொண்டு, பயந்து, பேசாமல் இருக்கிறதாலைதான் நாயை மாதிரி கேவலப்படுத்துறாங்கள் எண்டு நான் நினைக்கிறன். நடுத்தெருவிலை தன்னை ஒருத்தன் மானங்கெடுக்கிறதை இவள் புரிஞ்சுகொள்ளாமல், இதெல்லாம் பகிடி எண்டு நினைக்கிறாளோ? அவங்கள் காலங்காலமாய் இவளை, இவளின்ரை உணர்ச்சிகளை அடக்குறதை இவள் அறியாமல் இருக்கிறாளே!

(12 ம் பக்கம் பார்க்க)

# தமிழீழ நாட்டார் பாடல்களில் பெண்கள்

## நாட்டார் பாடல்கள் பற்றிய விளக்கம்

நாட்டுப்புற மக்களால் பாடப்படும் பாடல்கள் நாட்டார் பாடல்கள் என வழங்கப்படுகின்றன. இப்பாடல்கள் நாட்டுப்புறத்து மக்களின் வாழ்வோடு நெருக்கமாகப் பின்னிப்பிணைந்து இருக்கும் தன்மை கொண்டவை. மக்களுடைய பிறப்பு முதல் இறப்பு வரையான நிகழ்வுகள் நாட்டார் பாடல்களின் பொருளாக அமைந்திருக்கின்றன. மண்ணின் மைந்தர்களுடைய உண்மையான எண்ணக் கருத்துக்களை எளிய தமிழ்நடையிலே நாட்டார் பாடல்கள் வெளிப்படுத்துகின்றன.

நாட்டார் பாடல்கள் மக்களால் காடுகழனிகளிலும், தோட்ட வயல்களிலும், தொழில்செய்யும் இடங்களிலும், ஏற்றமிறைக்கும்போதும், மண்ணை வளம்படுத்தும்போதும், நாற்று நடும்போதும், களையெடுக்கும்போதும், கதிர் அறுக்கும்போதும், நெல் தூற்றும்போதும் பாடப்படுகின்ற பாட்டுகளாகும். நாட்டுப்புறத்து மக்களுடைய முழு வாழ்வு நிலையைச் சுட்டிக்காட்டும் பாடல்கள் என்றும் சொல்லலாம். மனிதனின் வாழ்க்கை தாலாட்டிலே தொடங்கி, விளையாட்டுப் பாடல்களிலே வளர்ந்து, காதற் பாடல்களிலே கனிந்து, திருமணப் பாடல்களிலே பொலிந்து, ஒப்பாரிப் பாடல்களிலே முடிவடைகின்றது. ஒரு மண்ணின், மக்களின் வரலாற்றை, பண்பாட்டை, பழக்கவழக்கங்களை, நாளாந்த நடப்புக்களையெல்லாம் நல்ல ஓவியங்களாக்கி நாட்டார் பாடல்கள் பேணி வைத்துள்ளன. அவை பழமையானவற்றைப் பதிவு செய்து வைத்துள்ளன. புதுமை நிலையிலே இன்று பலராலும் ஆய்வு செய்யப்படுகின்றன. எழுதப்படாத கவிதைகளாக மக்கள் வாய்மொழியால் நின்று நிலைத்து இன்று நூல்வடிவம் பெற்று வருகின்றன. செவியிலே சேர்த்து, மக்கள் வாழ்க்கை பற்றிய செய்திகளை இன்றும் கூறும் இந்த நாட்டார் பாடல்கள் தலைமுறை தலைமுறையாக நின்று நிலைக்கும் பாடல்களாயுள்ளன. எப்போது இப்பாடல்கள் தோன்றின என்று காலவரையறை செய்ய முடியாத நாட்டார் பாடல்கள், ஓசை நயம் கொண்டவை, உணர்ச்சிப்பாங்கு நிறைந்தவை, சொல் வளம் பெற்றவை. இலக்கண வரம்புக்கு உட்படாதவை. கேட்போரைப் பிணைக்கும் ஆற்றல் கொண்டவை. இந்தப்பாடல்களின் தோற்றம் மனிதன் தோன்றிய காலப்பழமை வாய்ந்தது. ஏடும் எழுத்தாணியும் கொண்டு கவிதை புனையும் காலத்துக்கு முன்பு தொடக்கமே மக்கள் வாய்வழி மரபாக வளர்ந்து வருபவை.

இப்பாடல்களுக்கு தமிழின் தொன்மை வாய்ந்த இலக்கணமான தொல்காப்பியமும் வரையறை கூறி நிற்கின்றது. தொல்காப்பியச் செய்யுளியல் சூத்.79, 164, 165 என்பன நாட்டார் பாடல் பற்றிய விளக்கத்தைத் தருகின்றன. தொல்காப்பியர் இப்பாடல்களை அடிவரையறையில்லாத செய்யுட்கள் எனக்கூறி அவற்றை நூல், உரை, பிசி, முதுமொழி மந்திரம், குறிப்பு மொழியென ஆறு வகைகளாக்கிக் கூறுகின்றார். உரையென்பது உரைநடையையும், பிசி என்பது விடுகதையையும், முதுமொழி என்பது பழமொழியையும், மந்திரம் என்பது காமாலை மந்திரம்போலத் தமிழிலே வழங்கியவற்றையும், குறிப்புமொழி என்பது குறிப்பால் உணர்த்தப்படுபவற்றையும் குறிக்கும். இவையாவும் எழுதப்பெறும் இலக்கியத்திற்கு உரிய இலக்கணமாக இருந்தாலும் வழக்கு மொழியிலும் வழங்குமெனத் தொல்காப்பியர் விளக்கிச் சென்றுள்ளார். வாய்மொழியாக வழங்குகின்ற இத்தகைய இலக்கியங்களையே மேலை நாட்டார் Folk Literature என அழைப்பர்.

மாரியா லீச் (Maria Leach), பௌரா (Bowra), கிமத் பீக்காக் (Kemmech Peacock) போன்ற மேலைநாட்டு அறிஞர்கள் நாட்டார் பாடல்களைப் பல்வேறு வகைப்படுத்தி விளக்கங்கள் தந்துள்ளனர்.

## நாட்டார் பாடல்களும் பெண்களும்

நாட்டார் பாடல்கள் பல, பெண்களால் பாடப்பட்ட பாடல்களாக அமைந்துள்ளன. சிறப்பாகத் தாலாட்டுப் பாடல்களும், குழந்தை பற்றிய பாடல்களும் இத்தகையவையாகும். பெண் தனது அனுபவத்தையும் பிறர் அனுபவத்தையும் அப்பாடல்களிலே விளக்கிவிடுகின்றாள். குழந்தையைத் தாலாட்டித் தூங்கப்பண்ணும் அவள் பாடல்களிலே பல செய்திகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. தாய்மை உணர்வின் வெளிப்பாடாக வரும் தாலாட்டுப் பாடல்களைக் கேட்டு குழந்தை தூங்குகிறது. தாய்மை உலகுக்கு வழங்கிய முதல் இலக்கியப் பரிசுதான் தாலாட்டு எனக்கூறுவர். தாலாட்டு என்ற சொல்லைத் தால்+ஆட்டு எனப் பிரிக்கலாம். தால் என்றால் நாக்கு என்றும், நாவை ஆட்டிப் பாடுவதால் 'தாலாட்டு' எனப்பெயர் பெற்றிருக்க வேண்டும் என்றும் கூறுவர். தாலாட்டு என்ற சொல் 'ஆராட்டு' எனவும் வழங்கப்படுகிறது. இன்றும் தாலேலோ, ஓராட்டு, ராராட்டு, தொட்டில் பாட்டு, ஓலாட்டு எனவும் பல பெயர்கள் வழங்கப்படுகின்றன. இத்தாலாட்டு மனித குலத் தொடக்கமுதலே தொடர்ந்து வருகின்றது. இப்பாடல்களைக் கருவாகக் கொண்டு பிற்காலங்களிலே எழுந்த இலக்கியங்களிலும் 'தாலேலோ', 'தாராட்டு' எனப் பாடல்கள் புனையப்பட்டுள்ளன. தமிழ்மொழியில் முதன்முதல் இலக்கியநிலைத் தாலாட்டுப் பாடல்களாக எமக்குக் கிடைப்பது பெரியாழ்வார் பாடல்களாகும். ஆண்புலவர்கள் தங்களைத் தாயாகப் பாவனை செய்து, இறைவன் மீது தாலாட்டுப் பாடியுள்ளனர்.

தாலாட்டுப்பாடல்கள் குறுகிய பாடல்களாக அமையும் பண்புடையன. இப்பாடல்களுக்குரிய பெயர் 'நீலாம்பரி' எனப்படுகிறது. எனினும் தாய் தனது குழந்தையைத் தூங்கப்பண்ணுவதற்காகப் பாடும்பாட்டு என்ற சிறப்புநிலையில், பல பண்புகளையும் செய்திகளையும் அடங்கிய ஒரு இசை மாலை போலவே அது அமைந்து உள்ளது. குழந்தை பெறுவதற்காக அவள் பட்ட துன்பங்கள் அவள் வாயிலாக வெளிவருகின்றன.

*மலடிக்கொரு குழந்தை மகனே -நீ*
*மாயவன் தந்த பிச்சை*
*இருடிக்கொரு குழந்தை -மகனே நீ*
*ஈசுவரன் தந்தை பிச்சை*
*காயது காய்த்தாலோ -மகனே நீ*
*கார்த்திகையாய்ப் பூத்தாயோ*
*பூவாத மாவினமே -மகனே நீ*
*பூத்த புண்ணியனே.*

என்ற பாடலடிகள், தாய் குழந்தைப் பேற்றுக்காகத் தவமிருந்து பெற்ற நிலையை உணர்த்துகின்றன. மலடியென்று உலகத்தவர் பழிசொல்லாமல் மைந்தனைப்பெற்று வாழவிரும்பும் பெண்ணுள்ளம் இப்பாடலில் அழகாகப் புலப்படுகின்றது. தமிழர் சமூக மத்தியில் குழந்தை இல்லாத பெண் மலடி, இருடி எனத் தூற்றப்பட்டாள். அவள் தொடங்கும் செயல்கள் பாழ்படும் என்ற நம்பிக்கை மக்களிடையே ஆழமாகப் பரவியிருந்தது. இதனால் எப்பாடுபட்டாவது ஒரு குழந்தையைப்பெற வேண்டும் என்று பெண்கள் முயன்றனர். விரதமிருந்தனர். நோன்புகாத்தனர்.

*வெள்ளி மெழுகி -நான்*
*வெகுநாள் தவமிருந்து*
*சனிமெழுகிச் சாதம் வைச்சு -நான்*
*சந்திரனை கைதொழுது*
*எறும்பு நுழையாத ஈசுவரன் கோயிலிலே*
*தலையால் நடந்து -நான்*
*தபசுகளே செய்து வந்தேன்*
*தபசு செய்து பெற்றெடுத்த -என்*
*செல்வத் தவக்கொழுந்தே*

இப்பாடல் அடிகள் குழந்தைப் பேற்றுக்காகச் செய்யப்படும் நோன்பு, விரத முறைகளை விளக்குவதாக அமைந்துள்ளது. நாட்டு மக்களின் நடைமுறை வாழ்க்கையில் இருந்த நம்பிக்கைகள் இதன் மூலம் உணரப்படுகின்றன. மனஉறுதியோடு வழிபாடு செய்யும் பெண்ணினுடைய மனஆற்றல் புலப்படுகின்றது. தாய்மைப்பேறு பெரும் பேறாக மதிக்கப்பட்ட நிலையிலே, தாயாகும் நிலைக்காகப் பெண் தன்னைப் பலவாறு வருத்திச் செயற்பட்டுள்ளாள். விஞ்ஞானத்தின் விளக்கங்கள் பல இல்லாத பழைய காலத்தில், தமிழ்ப்பெண்கள் இயற்கைத் தெய்வ வழிபாட்டிலே அசையாத நம்பிக்கை கொண்டு வாழ்ந்ததையும் இதனால் அறியமுடிகின்றது. குழந்தைப் பேற்றினால் பெறப்பட்ட இன்பம் கீழ்வரும்பாடலால் புலப்படுகின்றது.

*மோப்ப ஒரு மூக்கிருக்கும் மொழிய ஒரு நாக்கிருக்கும்.*
*ஏப்பம் தரும் மகிழ்ச்சி இலஞ்சியமே கண்வளராய்*
*அத்தை மடிமேலும் அம்மான்மார் தோள்மேலும்,*
*வைத்து மூத்தாட்டும் மரகதமே கண்வளராய்.*
*முல்லை முத்துச் செவ்விளநீர் முத்தமெல்லாம் -கொத்தமல்லி.*
*கொத்தமல்லி காக்கவந்த குமரேசா கண்வளராய்.*

குழந்தைப்பேற்றால் அக்குழந்தையோடு தொடர்புடைய பலரும் இன்பம் பெறுகின்றனர் உறவு நிலையிலே எல்லோரும் குழந்தையைக் கொண்டாடுகையில், பெற்றவள் பெருமையாகப் பேசப்படுகின்றாள். தாய்மை நிலை அவள் தனித்துவத்துக்குச் சிறப்புச் செய்கின்றது. எதிர்காலத் தலைமுறையை ஈன்றவள் என்ற நிலையில் மட்டுமன்றி, அதனை வளர்த்து ஆளாக்குபவள் என்ற பெருநிலையிலும் பெண் போற்றப்படுகின்றாள்.

பெண்ணின் தாலாட்டுப் பாடல்களிலே சமூக மரபுகள் பல நெறிப்படுத்தப்படுகின்றன. திருமண நிலையிலே பேணப்பட்டு வரும் நடைமுறைகளைக் குழந்தையிடமே அவள் சொல்வதாகப் பாட்டுப் பாடுகின்றாள்.

*முத்துச் சம்பா நெல்விளையும்*
*முத்தாட்டுக் காணியும்*
*அழகுச் சம்பா நெல்விளையும்*
*ஆக்காண்டி வயலும்*
*தம்பிக்குச் சீதனமாய்*
*தான் தருவார் உன்மாமன்*

என்ற அடிகளில் தமிழர் பேணிய மரபினைக் குழந்தையிடம் கூறுவதன் மூலம், தலைமுறை தலைமுறையாகச் சீதனமரபு வளர்ந்து வந்ததையும் ஆவணப்படுத்தி விடுகின்றாள்.

மனோன்மணி. ச

பழையகாலத்து நடைமுறைகள் எப்படி இருந்தனவென்பதை இன்று தேடிநிற்கும் பண்பாட்டு ஆய்வாளர்களுக்கும் தாலாட்டுப் பாடல்களிலே செய்திகள் தொகுக்கப்பட்டு வைக்கப்பட்டுள்ளன. தாயின் வாய்மொழியாகத் தமிழர் பண்பாடு பேசப்பட்டு உள்ளது.

*பொழுதால் அடியளந்து, புத்தகத்தில் நாள் -பார்த்து,*
*காதுகுத்தி, தோடுபோட்டு, நல்லதொரு பேரு -மிட்டு*
*மருங்கைவைச்சு உன்மாமன் சீர்வரிசைகள் -செய்வாராம்.*
*தங்கத்தால் தோடுசெய்து காதுக்கு சிமிக்கியும் -கொண்டு*
*காதுகுத்த வருவார்கள் கனத்த குடிமாமன்மார் -கள்*
*பாக்கு பதினொர் கலமாம். பச்சரிசி முக்கல -மாம்.*
*இளநீர் இருகலமாம். இளந்தேங்காய் மூன்னூ -றாம்*
*கட்டோடு வெத்திலையும் கமுகம் களிப்பாக்காம்*
*இத்தனையும் கொண்டு இறக்குவார் தாய் -மாமன்.*
*முத்திடிச்சி, மாக்குழைச்சு, முத்தமெல்லாம் -கோலமிட்டு*
*என்மகனே உனக்குநான் எடுத்திடுவேன் ஆலத்தி*

குழந்தை தொடர்பான நடைமுறைகள் இங்கே அழகாகத் தாயின் வாய்மொழியால் விளக்கப்பட்டுள்ளன. இந்த வகையில் தமிழ்ப்பெண்கள் பண்பாடு பேணும் பணி செய்துள்ளனர். அவர்களின் பட்டறிவு பின்னர் பயன்படத் தாலாட்டுப் பாடல்களாய் வெளிவந்துள்ளன. எல்லாவற்றையும் உற்று நோக்கி உரைக்கும் இப்பாடல்கள், நாட்டார் பாடல்களில் பெண்களின் பங்கினையும் தெளிவுபடுத்துகின்றன. குழந்தை பற்றிய முழுத் தகவல்களையும் பெண்கள் தாலாட்டுப் பாடல்கள் மூலமாக ஆவணப்படுத்தி வைத்துள்ளனர். சடங்குகள், நம்பிக்கைகள், விழாக்கள், கொண்டாட்டங்கள் நடைபெறும் வேளையிலே சமூகத்து மக்களின் பங்களிப்பு எவ்வாறு இருந்தது என்பதை இப்பாடல்கள் காட்டுகின்றன. குழந்தையின் வர்ணனைகள் பற்றிய பாடல்கள் பெண்களின் அழகுணர்வைப் புலப்படுத்தும் அழியாத கோலங்களா

Nallur Branch Library

கும். தாயின் கூற்றாகக் குழந்தையின் எதிர்காலம் செம்மையாகத் திட்டமிடப்பட்டதையும் நாம் அறியமுடிகின்றது. தன்மகன் வீரனாக, தீரனாக நாட்டுப்பற்றுள்ளவனாக வாழவேண்டும் என்ற பெண்களின் பெருவிருப்பு, மகனுக்காக அவள் செய்த பெரும் பணியை விளக்குகின்றது.

பெண், சமூகத்தின் கட்டுப்பாடு குலையாமல் இருப்பதற்கெனப் பணி செய்தவள். தாய் என்ற நிலையில் குழந்தையைக் கட்டுப்பாடாக வளர்த்தவள். தன் குழந்தையின் வாழ்வு சீராக அமையச் சில வேளைகளில் போராடியும் உள்ளாள். பெண் குழந்தைகளுக்கு அறிவுரை சொல்லும் ஆற்றல் பெற்ற தாய் பாடும் பாடல், பின்வரும் தாய் மகள் உரைநடையில் விளக்கமுறும்.

*மகள்: ஆற்றுக்கு அக்கரையில்*
*ஆசைக்குழல் ஊதுதம்மா.*
*தங்குதில்லை. தரிக்குதில்லை.*
*நான் தண்ணிக்குப் போய்வரட்டே?*

*தாய்: தண்ணிக்குப் போமகளே.*
*தரியாமல் வாமகளே.*
*கண்ணுக்கு உயர்ந்தவரை*
*கடைக்கண்ணும் பாராதே.*

பெண் வெளியே சென்று பொதுநிலையில் மற்றவர்களுடன் பழகுவது தவிர்க்கப்பட்ட காலமது. பிற ஆண்களுடன் பெண் தொடர்பு கொள்வதால் பெண்ணுக்கே இடையூறு நேருமெனத் தாய் முன்னரே அறிவுறுத்தல் செய்கின்றாள்: சமூகத்திலே ஆண்களின் ஒழுக்கம் பிறழ்வதைப்பற்றி அடுத்த பெண் தலைமுறைக்கு ஆழமாக உணர்த்தும் பெண்ணின் அறிவாற்றல், இந்த நாட்டார் பாடல் மூலம் பெறப்படுகின்றது.

காதற் பாடல்களிலும் திருமணப்பாடல்களிலும் சமூகமரபு பேணும் நடைமுறையைப் பெண்ணே செய்கிறாள். தமிழர் சமூகத்தில் ஆரம்ப நிலையில் இருந்த பெண்- ஆண் பொதுமைநிலை, பிற்காலத்தில் வேறுபட்டதை நாட்டார் பாடல்கள் தெளிவாகப் புலப்படுத்துகின்றன. ஆணின் ஒழுக்க மீறல் சமூகத்திலே ஏற்றுக்கொள்ளப்பட்டது. ஆனால் பெண் அதனால் அடையும் இடையூறுகள் எவையென்பதை ஆண்கள் எண்ணிப் பார்க்கவில்லை. பெண்களே நாட்டார் பாடல்களில் தாம் பெற்ற கசப்பான அனுபவத்தை, அடக்குமுறைகளை, இழிநிலைகளை பாடல்களிலே பாடியுள்ளனர். இப்பண்பு தொழிற் பாடல்களிலும் ஒப்பாரிப் பாடல்களிலும் கூட அருமையாக ஆவணப்படுத்தப்பட்டுள்ளது.

தமிழீழப் பகுதிகளான யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, வன்னி, திருமலை போன்ற பகுதிகளில் தேடித் தொகுக்கப்பட்ட நாட்டார் பாடல்களின் தொகுப்புக்களிலே இடம்பெற்ற நாட்டார் பாடல்களில் பெண்களின் பாடல்கள் மிக்குயர்வைத் தெளிவுபடுத்துகின்றன. மு. இராமலிங்கம் அவர்களால் தொகுக்கப்பட்ட ,கிராமக் கவிக்குயில்களின் ஒப்பாரிகள்' (1960), 'வடஇலங்கையர் போற்றும் நாட்டார் பாடல்கள்' 'இலங்கை நாட்டுப் பாடல்கள்' (1951), எவ். எக்ஸ், சி. நடராசாவின் 'ஈழத்து நாடோடிப் பாடல்கள்' சு. வித்தியானந்தனின் மட்டக்களப்பு நாட்டுப் பாடல்கள் (1962), மன்னார் நாட்டுப் பாடல்கள், (1964), வ. மற்றாஸ் மெயிலின் 'வன்னிவளநாட்டார் பாடல்கள்' என்பன இன்று இதுபற்றி அறிய தகவல் நிலையில் உதவுகின்றன. மக்களின் வாழ்வுச் சுற்றோட்டத்தில் பிறப்பு, பூப்பு, திருமணம், இறப்பு என்னும் நான்கு நிலைகளும் மிக முக்கியமானவை. அந்நிலைகளிலே ஏற்படும் நிகழ்ச்சிகளைப் பெண்களே பேணுதல் செய்துள்ளனர். இதனால் தமிழர் நடைமுறை பேணும் பணியில் பெண்கள் பணி பெரிதென்பது இன்று உணரக்கிடக்கின்றது.

எதிர்காலத்துக்கு வேண்டியவற்றை இனம் கண்டு பேணிப் பாதுகாத்து பின்னவரிடம் கையளிக்க வேண்டும் என்ற பெண்ணினுடைய இயல்பான ஆற்றல் நிலை, நாட்டார் பாடல்களில் தெளிவாகப் புலப்படுகின்றது பேச்சு வழக்குநிலையான சொற்களினை ஓசை நயத்துடன் கவிதையிலே யாத்துப் பாடிய பெண்களின் இசைமரபும் நெறியும் இன்றும் சிறப்புடன் பேசப்படுகின்றது. அவர்கள் வாயில் வாழ்ந்த பாடல்கள் நூல் வடிவில் தொகுக்கப்பட்டு வெளிவந்துள்ளன. மேலைநாட்டு நாட்டுப்புற இயல் ஆய்வாளர்கள் அப்பாடல்களைத் தேடிவருகின்ற நிலையும் ஒப்பீட்டாய்வு செய்கின்ற முயற்சிகளும் தொடங்கிவிட்டன. ஒரு இனத்தின் பண்பாட்டுத் தரவுகள் பற்றிய செய்திகளைப் பாடுனர், மரபுபேணுனர் என்ற இரு நிலையில் பெண்களைச் சிறப்புறுத்தி, இந்த ஆய்வுகள் நடைபெற வேண்டும். அதற்கெனத் தமிழீழப் பெண்கள் தனியான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும்.

## தமிழீழப் பெண்களின் பணியும் நாட்டார் பாடலும்

நாட்டார் பாடல்களில் பெண்கள் நிலையும் பங்களிப்பும் இன்னமும் தெளிவாக மற்றையோர்க்குப் புலப்படும் வகையில் வெளிப்படுத்தப்படவில்லை. பெண்களே அவற்றைத்தேடித் தொகுத்து, வகுத்து, விளக்கங் கூறும் புதியதொரு மரபு தொடங்கப்படவேண்டும். கடந்த காலங்களிலே தமிழீழ நாட்டார் பாடல்களைத் தொகுத்தவர்களில் பெண்கள் யாருமே இல்லை என்று சொல்லும் அளவுக்கு நாட்டார் பாடல் பற்றிய ஆய்வு தமிழீழத்தில் செய்யப்பட்டுள்ளது. எனவே இக்குறையை நீக்கவேண்டிய நிலை ஒருபுறமிருக்க இன்றைய காலகட்டத்துக்கு இது மிகவும் தேவையான ஒரு பணியென்பதைப் பெண்கள் உணரவேண்டும். நமது மூதாட்டிகளின் வாய்மரபிலே வளர்ந்த பாடல்களை நூல்வடிவிலே தொகுக்குமிடத்து, பாடமாற்றங்களும் நடைபெற வழியுண்டு. பெண்கள் தொடர்பான கருத்துக்களை ஆண்கள் முழுநிலையில் விளங்க முடியாத தன்மைகளும் உண்டு. எனவே இக்குறைபாட்டை நீக்க, நாட்டார் பாடல்களைப் பாடுகின்ற பெண்களைக் கிராமிய நிலையில் தேடிச் சென்று, அவர்தம் பாடல்களை நேரடியாகவே ஒலிப்பதிவு செய்யவேண்டும். அப்பாடல்களிலே அவர்கள் கையாளும் மொழி, கருத்து என்பவை பற்றிய விளக்கத்தை அவர்கள் வாயிலாக அறிந்து, அதனையும் ஒலிப்பதிவு செய்துவைக்க வேண்டும்.

தொழில் நிலையிலே பெண்கள் பாடும் பாடல்களைத் அத்தொழில் நடைபெறுகின்ற களத்திலே நேரடி ஒலிப்பதிவு செய்யவேண்டும். அப்போது தான் அவர்களின் பாடல்களை உண்மையான உணர்வுடன் பதிவுசெய்யமுடியும். ஆண்களுக்கும் பெண்களுக்கும் தொழில் நிலையான வேறுபாடு இன்னமும் நம்மிடையே பேணப்பட்டு வருகின்றது. ஓரே வேலை செய்தும் ஊதியம் வேறுபடும் நிலையுண்டு. இந்நிலையில் தொழில் செய்யும் பெண்களின் வாய்மொழியாக வரும் பாடல்கள், அவர்கள் உணர்ச்சியில் அதுபற்றியிருந்த சோகத்தை மறைக்கும் பாடல்களாக வெளிப்படக்கூடும். அந்நிலையை விளக்கும் பாடல்களாகவும் அமையக்கூடும். இரு பெண்களின் உரையாடல் நிலையாக அமையும் பாடல்களில் இச்சிக்கல் தீர வழி காண்பதாகவும் அமையலாம். இளமை' குடும்பம், உறவு. நட்பு போன்ற நிலைகளிலே பெண்களின் மனவுணர்வுகள் பாதிக்கப்படும் தன்மைகளையும் இப்பாடல்கள் வெளிப்படுத்தக்கூடும். இவற்றையெல்லாம் புதிதாக ஆய்வு செய்யவேண்டும். ஆண்களின் தொகுப்பும் விளக்கமும் என்ற நிலையில் இருந்து வேறுபட்டு, பெண்களின் பார்வையில் நாட்டார் பாடல்கள் பற்றிய கருத்துக்கள் வெளிவரவேண்டும்.

இப்பாடல்களை இன்று வாழ்பவர்களும் கேட்டு மகிழ்வதுடன் மட்டுமன்றித் தமது எண்ணக் கருத்துக்களையும் எடுத்துக் கூறுவதற்கு வழிசெய்யலாம். நாட்டார் பாடல்களின் இசைமரபினையும் ஏனைய செய்யுள் இசை மரபுகளையும் ஒப்பிட்டு நோக்கலாம். நாட்டார் மரபு, இசை மரபுகள் எவ்வாறு பிறவற்றோடு தொடர்புறுத்தப்படலாம் என்பதையும் கருத்திற்கொண்டு பணிசெய்ய வேண்டும்.

பெண்ணடிமை, பெண்விடுதலை, பெண் அடக்குமுறை எனப்பலப்படப் பேசப்படுகின்ற விடயங்கள், தமிழர் மத்தியில் எவ்வாறு இருந்தன என்பதை உணர்வதற்கும் நாட்டார் பாடல்கள் துணைசெய்யும். இன்று எமது நாட்டின் சூழ்நிலையால் நாட்டார் பாடல்களில் தகவல் தந்த பெண்கள்தான் நல்ல வரலாற்றுப் பதிவாளர்கள். அவர்களின் கவிதைப் பாடல்கள் வாழ்க்கையில் நடந்தவற்றைப் பற்றிக்கூறுவன. போர்க் காலச் சூழலால் பல இடையூறுகளுக்கு ஆளாகி இருக்கும் மக்களுக்கு பல வகையிலும் அறிவூட்டக்கூடியவை. கைமருத்துவம், குழந்தைப்பேறு, உணவு, உடை, உறையுள் கலை போன்ற பல்வேறு பொருட்கள் தொடர்பான தகவல்களை நாட்டார் பாடல்கள் தருகின்றன. இங்கு பெண்களின் விடுதலைக்காகத் தலைவர் திரு. வே. பிரபாகரன் அவர்கள் கூறிய வார்த்தைகளை மனங்கொள்வது பொருத்தமாகும்.

> *''சமத்துவத்தின் அடிப்படையில் ஒரு சமதர்ம சமுதாயத்தைக் கட்டி எழுப்புவதே எமது போராட்ட இலட்சியம். பெண்கள் சமஉரிமை பெற்று, சகல அடக்குமுறைகளிலிருந்தும் விடுதலை பெற்று, ஆண்களுடன் சமத்துவமாக, கௌரவமாக வாழக்கூடிய புரட்சிகரமான சமுதாயமாகத் தமிழீழம் அமையவேண்டும் என்பதே என் ஆவல்.''*

இங்கு கூறப்பட்ட வார்த்தைகள் அனைத்துத் தமிழ்ப் பெண்களுக்கும் நம்பிக்கையூட்டுகின்ற நல்லாதரவு தருகின்ற வார்த்தைகள். அவற்றை மனங்கொண்டு அனைவரும் பணி செய்ய வேண்டும். பெண்கள் என்ற சிறப்பு நிலையிலும் தமிழ்ச் சமூகத்தவர் என்ற பொதுநிலையிலும் நாட்டார் பாடல்களில் பெண்களின் பணி மிக்குயர்வானது. அதை அனைவரும் உணரக் கூடிய வகையில் ஆக்குவதே இன்றைய மக்களின் கடமையாக வேண்டும். வெறுமனே எழுத்திலும் பேச்சிலும் எள்ளி நகையாடப்படும் எம்முடைய பெண்கள் சமூகத்தில் தலைநிமிர்ந்து வாழ நாட்டார் பாடல் செய்திகள்தான் உதவும். பெண்ணின் ஆக்கப்பணியை வெறுமனே 'பாட்டு' என்ற நிலையில் பாடும் பொருளாக்கிவிடாது, பண்பாடு போற்றும் பணியென்ற வகையில் சிறப்புற வைப்பதே எமது பணியாக வேண்டும்.

# பெண்ணியம் —தோற்றம்

யில், சம அந்தஸ்தை பெறுவார்களாயின் அவர்களிடம் இயல்பாகவே இருக்கும் உயர்ந்த பண்புகளின் மூலம் பெண் மட்டுமன்றி, ஆணும் நன்மையடைய முடியும் என்ற கருத்து முன்வைக்கப்பட்டது.

19ம் நூற்றாண்டின் முடிவில் பெண் இயக்கமானது ஒரு புறம் பால் சார்ந்த வரையறைகளைக் களைவதையும் மறுபுறம் பெண் என்று அழைக்கப்படக்கூடிய பழக்கவழக்கங்களையும், பண்புகளையும் இல்லாது ஒழிப்பதைவிட அதை அங்கீகரிப்பதையும் விரும்பியது. 20ம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் அதாவது 1910, 20களில் தோன்றிய பெண் இயக்கங்கள் பெண்ணியத்தின் முதலாவது அலை எனப்படுகின்றது.

மேற்குலகம் போன்றே மூன்றாம் உலகுக்கென்று பெண்ணியம் பற்றிய வரலாறு உண்டு. எனினும் இக்கோட்பாடு தொடர்பாக ஒரு குழப்ப நிலையே காணப்படு கின்றது. சில இடதுசாரிகள், சம்பிரதாயப்பற்றுள்ளோர், அரசியல் பழைமைபேண்வாதிகள், பெண்ணியத்தை மேற்குலக முதலாளித்துவத்தின் இழிநிலை உற்பத்திப்பொருள் என வாதிடுகின்றனர். இக்கருத்தானது ஒருபுறம் பெண்களை அவர்களின் கலாசாரம், மதம், குடும்பப் பொறுப்புகள் போன்றவற்றிலிருந்து திசைதிருப்பி விடுவதற்கு முயறசிசெய்யும் அதே சமயம்,மறுபுறத்தில் சமத்துவம், தேசியவிடுதலை போன்றவற்றிக்கான புரட்சிகரப் போராட்டத்திலிருந்தும் அவர்களைத் திசை திருப்பி விடுகின்றது. ஆசியா, ஆபிரிக்கா போன்ற நாடுகளில் பெண் விடுதலை இயக்கங்கள் தொன்மை வாய்ந்தவை அல்ல என்றும் இது உண்மையில் மேற்கு ஐரோப்பிய, வட அமெரிக்க தோற்றப்பாடுதான் என்றும் எண்ணுகின்ற கருத்துநிலை மேற்குலகில் கூட காணப்படுவதுடன் ஒருவேளை மூன்றாம் உலகில் பெண் விடுதலை இயக்கங்கள் இருந்தாலும் கூட அவை மேற்குலக மாதிரிகளையே அடிப்படையாகக் கொண்டவை என்றும் ஒரு எண்ணப்பாங்கு காணப்படுகின்றது ஆனால் மேற்குலகில் இருந்து மூன்றாம் உலகிற்கு பெண்ணியக் கோட்பாடுகள் இறக்குமதி செய்யப்படவில்லை என்றும், மூன்றாம் உலகில் பெண்களைப் பாதிப்படையச் செய்கின்ற கருத்துரீதியான மாற்றங்களினூடாகவே பெண்ணியத்தின் வரலாறு உண்டு என்றும், இந்த வரலாற்றுச் சூழ்நிலையின் முக்கிய கூறுகளில் மேற்குலக சிந்தனைகளும் ஏகாதிபத்தியத்தின் தாக்கமும் செல்வாக்கு செலுத்தியிருப்பினும்கூட மூன்றாவது உலகிற்கென்றே பெண்களைப் பாதிக்கின்ற கருத்து நிலை மாற்றங்களை வரலாற்றுச் சூழ்நிலைகள் உற்பத்தி செய்தன என்றும், அதனூடாகவே மூன்றாம் உலகில் பெண்ணியம் தோற்றம் பெற்றது என்றும் குமாரி ஜெயவர்த்தனா "மூன்றாம் உலகில் பெண்ணியமும் தேசியவாதமும்" என்ற அவரது நூலில் குறிப்பிடுகின்றார். பெண் உரிமை, பெண் கல்வி தொடர்பான விவாதங்கள் 18ம் நூற்றாண்டிலே சீனாவில் இருந்தது என்றும் 19ம் நூற்றாண்டில் இந்தியாவில் பெண்களின் சமூகரீதியான விடுதலைக்கான பெண் இயக்கங்கள் இருந்தன என்றும், ஆசிய நாடுகள் பலவற்றிலும் 60- 80 வருடங்களுக்கு முன்பே பெண்ணியப் போராட்டங்கள் இருந்து வந்துள்ளன என்றும் ஆய்வுகள் தெரிவிப்பதாக இவர் மேலும் குறிப்பிடுகின்றார்.

இந்நாடுகளில் பொதுவாக பெண்ணியத்தின் தோற்றத்திற்கான சமூக, பொருளாதாரக் காரணிகளை ஆராயும்போது, ஏகாதியத்தியத்திற்கெதிரான எதிர்ப்பு, வெளிநாட்டு ஆதிக்க சக்திகளின் பலதரப்பட்ட வடிவங்கள் ஒருபுறமும், நிலமானிய அரசுகள், சுரண்டுகின்ற உள்ளூர் ஆட்சியாளர்கள், மரபு ரீதியான குடும்ப ஆட்சி முறை, மத அமைப்புக்கள் மறுபுறமாகப் பெண் உரிமைப் போராட்டங்களும் பெண் உரிமைகளுக்கான ஜனநாயக இயக்கங்களும் நோக்கப்படுதல் அவசியம். மூன்றாம் உலகில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகள் தேசியரீதியான எதிர்ப்பு இயக்கங்களின் முக்கிய பகுதியாக ஆரம்பகாலப் பெண்விடுதலை இயக்கங்கள் இருந்துள்ளதை உறுதிப்படுத்துகின்றன. பெண்ணின் அந்தஸ்து, சமுதாயத்தில் பெண்ணின் பங்கு போன்றவை பற்றிய விவாதங்கள் ஏற்கனவே ஆரம்பித்து விட்டாலும் கூட, ஏகாதிபத்திய விரிவின் யுகத்தில்தான் இவை புதுப் பரிமாணங்களைப் பெற்றன. முதலாளித்துவத்தின் வளர்ச்சியானது பழைய சமூக ஒழுங்கை மாற்றியதுடன் புதிய வர்க்கங்களையும் தோற்றுவித்தது. வெளிநாட்டு உள்நாட்டு முதலாளிகள் நிலச்சுவான்தார்களுக்கு பெருந்தோட்டங்கள், விவசாயம், தொழிற்சாலைகள் போன்றவாறில் பெண்கள் மிக மலிவான உழைப்புச் சக்தியாக விளங்கினர். பெண்ணின் அசைவை, பெண்ணின் சுதந்திரத்தைக் கட்டுப்படுத்திய பிரபுக்களும், செய்முறைகளும் மலிவான உழைப்பைத் தேடிக் கொண்டிருந்த முதலாளித்துவத்திற்கு நட்டமுண்டாக்கக் கூடியதாக இருந்தமையால், இக்கட்டுப்பாடுகளை உடைத்தெறிந்து பெண்விடுதலையை வென்றெடுப்பதற்குரிய முயற்சிகளில் முதலாளித்துவம் முழுமூச்சுடன் செயற்பட்டது. இந்தியாவில் விதவைகள் எரிப்பு, முகத்திரை அணிதல், பல மனைவியருடமை, திருமணமாகாமல் கூடிவாழும் தன்மை, எகிப்து, துருக்கி, கொரியா

(8-ஆம் பக்கம் பார்க்க)

# துரோகியின் தாய்

இத்தாலியில் காலங்காலமாக வழங்கிவரும் கதைகளை கோர்ஸ்க்கி என்னும் எழுத்தாளர் ''இத்தாலியக் கதைகள்'' என்னும் நூலாகத் தொகுத்துள்ளார்.

அவற்றுள் ''துரோகியின் தாய்'' என்னும் இக்கதையும் அடங்குகின்றது.

தனது தாய் நாட்டின் மீதே படையெடுத்து வந்த மகனைக் கொன்று நாட்டைக் காத்த ஒரு பெண்ணை, அவளது தாய்மையை இக்கதை விளக்கி நிற்கின்றது.

சில வாரங்களாக எதிரிகள் இந்நகரைச் சூழ்ந்து இரும்பு வளையத்தை ஒத்த அமைப்பில் படையணிகளை நிறுத்தி இருந்தனர். இரவில் அவர்களின் கூடாரங்களின் மத்தியில் மூட்டப்பட்ட தீ, பிசாசின் கரங்களைப் போல எழுந்து நகரைவிழுங்கி விடத்துடிப்பது போல் சுற்று மதில்களினூடு எட்டிப்பார்க்க முயன்றது.

எதிரியின் சுற்றிவளைப்பு படிப்படியாக இறுகுவதை நகர மக்கள் மௌனமாக அவதானித்தனர். குதிரைகளின் கனைப்பொலியும், ஆயுதங்கள் ஒன்றோடொன்று மோதும் ஒலியும், தமக்கு வெற்றி நிச்சயம் என்ற இறுமாப்பில் கும்மாளம் இடும் எதிரிகளின் எக்களிப்பும் அவர்களின் காதுகளை நாரசாரமாகத் தாக்கின.

நகரைச்சுற்றியிருந்த ஓடைகளில் சடலங்கள்மிதந்து கொண்டிருந்தன. சூழவிருந்த காடுகளும். களனிகளும் தீக்கிரையாகி விட்டதால் பொட்டல் வெளியின் நடுவே நகர் தனித்துநின்றது. தினமும் எதிரியின் பீரங்கிகள் கோட்டைமதிலினுள் சாமழை பொழிந்தன.

போராலும், பசியாலும் களைத்துப்போன நகரப்படையினர் சோர்ந்து துவண்டவர்களாக நடமாடினர். காயமுற்றவர்களினது முனகல்களும், மரண ஓலங்களும் மட்டுமே இடைக்கிடை எழுந்து மேலும் வெறுமையை அதிகரித்தன.

தமது குரலைக்கூட கேட்கப் பயந்தவர்கள்போல் தமக்குள் கிசுகிசுத்தனர்.

''அங்கே என்ன சத்தம்? ஒருவேளை ........,... அவர்கள் முன்னேறத் தொடங்கி விட்டார்களோ?'' இந்தக் கேள்வி எல்லாமனங்களிலும் எழுந்து தாண்டவமாடியது. இரவுகள் தான் எல்லாவற்றிலும் மோசமானவையாக இருந்தன. இப்போது முனகல்களும், ஓலங்களும் தெளிவாகக்கேட்டன. பாதி உடைந்த சுவர்களின் நிழல்கள் கூட பயந்தவைபோல மெதுவாகப்

அவர்கள் உடனடியாக வீடுகளுக்குள் புகுந்துகொண்டனர். இல்லையோ குனிந்த தலையுடன் விரைவாக அவளைக் கடந்து சென்றனர். படைத்தலைவர்களோ அவளைக் கண்டதும் ''வெளியே கிளம்பிவிட்டாயாமடோனா?"

''கவனம் நீ செத்தால் கூட இங்கே யாரும் தேடுவதற்கில்லை'' என அதட்டினர்.

அவள் மௌனமாகக் காத்திருந்தாள். ஆனால் அவர்களோ அவளைப் பார்க்கக்கூடப் பிடிக்காதவர்கள் போல் விலகிச் சென்றனர்.

ஒரு சடலம்போல் அருவருத்து ஒதுக்கப்பட்ட அவள் தனிமையாய் நகரவீதிகளில் நடமாடினாள். நகரின் துயரமே பெண்வடிவெடுத்து விட்டதைப்போல அவள் நடந்தாள்.

தாயென்ற முறையிலும், ஒரு பிரஜை என்றமுறையிலும் அவள் சிந்தித்தாள். அவளது மகன்தான் நகரைச் சூழவிருந்த எதிரிகளின் தலைவன். கொஞ்ச நாட்களுக்கு முன்னர்தான் பெருமிதத்துடனும் மகிழ்வுடனும் அரவணைத்த அவளின் செல்வமகன், எந்த நாட்டுக்குப் பெரும்புகழ் தேடித்தருவான் என எதிர்பார்த்தாளோ அந்த மகன், தானும் தன் தாயும் பிறந்து, தவழ்ந்து, நடந்து, வளர்ந்த நகர்மீது படையெடுத்து வந்திருக்கிறான்.

அவள் ஆழமாக யோசிக்கிறாள். அவள் இந்த மண்ணின் புதல்வி. ஆயிரக்கணக்கான பந்தச்சங்கிலிகள் அவளுக்கும் இந்த மண்ணுக்கும் இடையில் இறுகப்பிணைந்துள்ளன. இதே மண்ணில் தான் அவளது மூதாதையர் தூங்குகிறார்கள். இதிலிருந்து எழுந்தமொழி, கலாசார நம்பிக்கை என்பவற்றின் கலவைதான் அவள்.

இரவுகளில் கரிய ஆடையுடன்ஓசையின்றி நடந்துதிரிந்த அவளைப் பார்த்த மக்கள் மரணதேவதையோ எனத் திகைத்தனர், அந்தத் துரோகியின் தாயின் பாதையிலிருந்தேவிலகி நடந்தனர்.

தொலைத்துவிட்ட எதையோ தேடுபவள்போல குனிந்தபடி நடந்த அவள் ஒரு சடலத்தினருகில் அமர்ந்திருந்த ஒரு பெண்ணின் அருகில் தாமதிக்கிறாள்.

மடோனா சட்டெனத் தன் முகத்தை மூடியபடி நகர்ந்தாள். மறுநாள் அவள்படைத் தலைவனைச் சந்தித்தாள்.

''நான் பெத்த மகன் இண்டைக்கு உங்கட எதிரியாகிவிட்டான். ஒன்றில் என்னைக் கொல்லுங்கோ. இல்லாவிட்டால் அவனிட்ட அனுப்புங்கோ"

"எது எப்படியிருந்தாலும் நீ இந்த நாட்டைச் சேர்ந்தவள்தானே. உன்னை எப்படி எங்கட எதிரியின்ர கொலை வெறிக்குப் பலியாக்கிறது?''

''ஆனா நான்தான் அவனின்ர தாய், அந்தப் பாவியை இந்த உலகத்துக்குத் தந்ததே நான்தானே''

அவர்கள் தமக்குள் உரையாடிய பின் தமது முடிவை அவளுக்குத் தெரிவித்தனர். ''உன்ர மகனின்ர பிழையளுக்காக உன்னைத் தண்டிக்கிறதில எந்தவிதமான ஞாயமும் இல்லை. அவனை நீ இந்தப் பாதையில வழிநடத்தவில்லை எண்டதும் எங்க்ளுககு விளங்குது. ஆனா உன்ர நிலமையையும் நாங்கள் விளங்கிக் கொள்ளுறம். உன்ர மகனுக்கு உன்னைப் பற்றிய நினைப்பு இருக்கும் எண்டு நீ எதிர்பார்த்தா நீ ஏமாறப்போகிறாய்.''

தமிழாக்கம்
**வசந்தா**

''பரவாயில்லை''

அவர்கள் அவளுக்காகக் கோட்டைக்கதவுகளை ஒரு முறை திறந்தனர். இந்த மண்ணைவிட்டுப்பிரீய மனமில்லாதவளாக அவள் வெளியே நடந்தாள். தோள்களில் தாங்கமுடியாத சுமையைச் சுமப்பவர்களைப்போல இலேசாகத் தள்ளாடியபடி அவளது உருவம் எதிரியின் பாசறையை நோக்கி நகர்வதை நகர மக்கள் பார்த்தனர்.

தனது வருகை எதிரிகளின் முகாமினுள் பெரும் புதிரை உருவாக்கியதை அவள் உணர்ந்துகொண்டாள். அவளை அணுகிக் கேள்விக் கணைகளைத் தொடுத்தனர்.

''உங்கள் தலைவன் என் மகன்''

அவர்கள் அவளை ஆர்ப்பாட்டத்துடன் வரவேற்ற

''இது உன் தாய்நாடு'' அவன் வெற்றியின் போதை தலைக்கேறி நிற்கின்றான்.

"அதற்கென்ன? நாளைய வெற்றியின் பின் எனது நாடாகத்தானே இருக்கப் போகிறது."

''உன்னுடைய வெற்றிக்கு உனது மக்களையே கொல்லப் போகிறாயா?''

''மக்கள்! அம்மா, ஒருவனின் வீழ்ச்சியில் தான் அடுத்தவனின் வெற்றியே தங்கியுள்ளது என்பதை மறந்து விட்டியா?.''

மடோனா தொடர்ந்து மகனுடன் வாதாட முயன்றாள். அவனது மனதை மாற்ற முயன்றாள்.

ஒரு தாய் ஆக்கத்தின் மூலாதாரம். அவளால் அழிவைத் தாங்கமுடிவதில்லை. நேர்மையும் வாய்மையும் கூட ஆக்கத்தின் நண்பர்களே, ஒரு தாயாக இருந்ததாலோ என்னவோ அவளால் அநீதியைப் பொறுக்கமுடியவில்லை.

ஒரு உண்மையான தாய் அநீதியைக் காணும்போது பொங்கியெழுகிறாள். போர்க் கோலம் பூணுகிறாள்.

மடோனாவோ தலையைக் குனிந்தபடி சிந்தித்தாள். மகனோ தான் அடைந்துவிட்ட, அடையப் போகும், வெற்றிகளைப்பற்றி ஆர்ப்பரித்துக் கொண்டிருந்தான்.

அலங்காரத்துடன் விளங்கிய படைத்தலைவனின் கூடாரத்தின் வாசலூடாகத் தான் பிறந்து, வளர்ந்த நகரை பார்க்கிறாள். அவளது வயிற்றில் பிறந்தவன் ஆக்கத்தின் எதிரி அவளது உடல் சிலிர்க்கிறது.

மறைந்து கொண்டிருக்கும் சூரியனின் ஒளிபட்டுச் செந்நிறமாகத் தோன்றிய நகரைக் கண்ணிமைக்காது பார்க்கிறாள். கொஞ்சம் கொஞ்சமாக இருள் பரவுகிறது.

சிறுவெளிச்சம்கூட இல்லாத கும்மென்று இருளடைந்த வீடுகளின் கூரைகளை அவளின் விழிகள் துழாவுகின்றன. விடிவின் நம்பிக்கையைப் பூரணமாக இழந்துவிட்ட மக்களின் முகங்கள் அவள் மனக் கண்ணின் முன் எழுந்தன.

''நான் ஒரு தாய். அழிவைத் தடுத்து ஆக்கத்தை வளர்த்தல் எனது கடன்'' அவள் தனக்குள் உறுதி செய்கிறாள்.

"இன்று நள்ளிரவில் நாங்கள் தாக்குவோம். நாளை

(8 ம் பக்கம் பார்க்க)

## பள்ளி

நான் அவளை உற்றுப் பாக்கிறேன்.

உனக்கு வாய் இல்லையோ? நாக்கைப் பிடுங்கிறமாதிரி நாலு வார்த்தை எதிர்த்துப் பேசத் தெரியாதோ? நீயெல்லாம் மானமுள்ள பொம்பிளைதனே'' எண்டு நான் அவளைப் பாத்துப் பேசுறன்.

''உன்னை மாதிரி என்ரை பேத்தி இருந்தால் இந்த தெருவிலை நடக்கிறதே வேறையாயிருக்கும்'' எண்டு நான் பெருமையோடை சொல்லுறன்.

அவள் தலையைக் குனிஞ்சு கொண்டு பேசாமல் நிக்கிாள்.

"இனிமேல் இப்பிடி ஒண்டும் தெரியாதவளாய்" வாய் பேசாதவளாய் இருக்காதை. தைரியமாய் நிமிர்ந்து நில். அதுக்குப்பிறகு உன்னை ஒருத்தரும் அசைக்கவே மாட்டினம்...''

நான் உணர்ச்சி வசப்பட்டு தெரு எண்டதையும் மறந்து பெரிய குரலில் கத்துறன்.

அவள் நிமிர்ந்து என்னைப் பார்க்கிறாள். என்ரை பேத்தியின்ரை கண்ணிலை தெரியிற உறுதியும், தெளிவும் இப்ப

இல்லை" எண்டது புரிய நான் பூரிச்சுப்போய் நிக்கிறன். ஓடிப்போற வாகனங்களுக்கிடையிலை அவள் அடிக்கடி மறைய நான் எட்டிஎட்டிப் பாக்கிறன். இந்த பெரிய வெளியைக் கடந்து அவள் மறையுறாள். ஒரு புள்ளியைப் போலை அவளின்ரை உருவம் என்ரை கண்ணை விட்டு மறையுது.

மனம் நிம்மதியாய் மூச்சுவிட நான் திரும்பி நடக்கிறன்.

''இவ்வளவு காலாமாக சமைச்சதையும், பிள்ளையளைப் பெத்ததையும் தவிர வேறை என்னத்தைச் சாதிக்காய்...'' எண்டு பேத்தி அடிக்கடி என்னைக் கேக்கிறது இப்பவும் காதிலை ஒலிக்குது.

இவ்வளவு காலத்துக்குப் பிறகு - இத்தனை வயதுக்குப் பிறகு இண்டைக்கு நானும் ஒருத்திக்கு விழிப்புக் கொடுத்திருக்கிறன். ஒருத்திக்கு உண்மையைப் புகுத்தியிருக்கிறன் எண்டதை நினைக்கேக்கை என்னிலையே எனக்குப் பெருமையாய்க் கிடக்கு.

தூங்கிக்கிடக்கிற எங்கடை பெண்இனத்தை நாங்கள் தட்டி எழுப்பவேணும். அடக்குமுறைக்கெதிராய் போராடவேணும்...'' எண்டு மேடை

கனைப்பொலியும், ஆயுதங்கள் ஒன்றோடொன்று மோதும் ஒலியும், தமக்கு வெற்றி நிச்சயம் என்ற இறுமாப்பில் கும்மாளம் இடும் எதிரிகளின் எக்களிப்பும் அவர்களின் காதுகளை நாரசாரமாகத் தாக்கின.

நகரைச் சுற்றியிருந்த ஓடைகளில் சடலங்கள்மிதந்து கொண்டிருந்தன. சூழவிருந்த காடுகளும், கழனிகளும் தீக்கிரையாகி விட்டதால் பொட்டல் வெளியின் நடுவே நகர் தனித்துநின்றது. தினமும் எதிரியின் பீரங்கிகள் கோட்டைமதிலினுள் சாமழை பொழிந்தன.

போராலும், பசியாலும் களைத்துப்போன நகரப்படையினர் சோர்ந்து துவண்டவர்களாக நடமாடினர். காயமுற்றவர்களினது முனகல்களும், மரண ஓலங்களும் மட்டுமே இடைக்கிடை எழுந்து மேலும் வெறுமையை அதிகரித்தன.

தமது குரலைக்கூட கேட்கப் பயந்தவர்கள்போல் தமக்குள் கிசுகிசுத்தனர்.

''அங்கே என்ன சத்தம்? ஒருவேளை ........,... அவர்கள் முன்னேறத் தொடங்கி விட்டார்களோ?'' இந்தக் கேள்வி எல்லாமனங்களிலும் எழுந்து தாண்டவமாடியது. இரவுகள் தான் எல்லாவற்றிலும் மோசமானவையாக இருந்தன. இப்போது முனகல்களும், ஓலங்களும் தெளிவாகக்கேட்டன. பாதி உடைந்த சுவர்களின் நிழல்கள் கூட பயந்தவைபோல மெதுவாகப் பரவின.

நகரமக்கள் வெற்றி கிடைக்கும் என்ற நம்பிக்கையை முற்றாகவே இழந்து விட்டிருந்தனர். பட்டினியால் சோர்ந்து போயிருந்த அவர்களின் மனத்திடம் நாளாக நாளாகத் தேய்ந்து கொண்டிருந்தது, வானமும் அவர்களின் மனநிலையைப்போலவே இருட்டாக இருந்தது, அங்கே ஒரு நட்சத்திரம் கூட நம்பிக்கை ஒளிர்வை அவர்களுக்கு வழங்க இருக்கவில்லை.

அவர்களோ வீடுகளில் விளக்குகளை ஏற்றுவதற்குக் கூடப் பயந்தார்கள். வீதிகள் இருளினுள் மூழ்கிக்கிடந்தன. அந்த இருளினுள் கரியநிற ஆடை அணிந்த ஒரு பெண் தயங்கியபடி நடந்து கொண்டிருந்தாள்.

அவளைக்கண்ட போதெல்லாம் மக்கள் தமக்குள் முணுமுணுத்தனர்.

''இதுதானா அவள்?''
''இதுதான்'''

தாள்.

தாயென்ற முறையிலும், ஒரு பிரஜை என்றமுறையிலும் அவள் சிந்தித்தாள். அவளது மகன்தான் நகரைச் சூழவிருந்த எதிரிகளின் தலைவன். கொஞ்ச நாட்களுக்கு முன்னர்தான் பெருமிதத்துடனும் மகிழ்வுடனும் அரவணைத்த அவளின் செல்வமகன், எந்த நாட்டுக்குப் பெரும்புகழ் தேடித்தருவான் என எதிர்பார்த்தாளோ அந்த மகன், தானும் தன் தாயும் பிறந்து, தவழ்ந்து, நடந்து, வளர்ந்த நகர்மீது படையெடுத்து வந்திருக்கிறான்.

அவள் ஆழமாக யோசிக்கிறாள். அவள் இந்த மண்ணின் புதல்வி. ஆயிரக்கணக்கான பந்தச்சங்கிலிகள் அவளுக்கும் இந்த மண்ணுக்கும் இடையில் இறுகப்பிணைந்துள்ளன. இதே மண்ணில் தான் அவளது மூதாதையர் தூங்குகிறார்கள். இதிலிருந்து எழுந்தமொழி, கலாசார நம்பிக்கை என்பவற்றின் கலவைதான் அவள்.

இரவுகளில் கரிய ஆடையுடன்ஓசையின்றி நடந்துதிரிந்த அவளைப் பார்த்த மக்கள் மரணதேவதையோ எனத் திகைத்தனர், அந்தத் துரோகியின் தாயின் பாதையிலிருந்தேவிலகி நடந்தனர்.

தொலைத்துவிட்ட எதையோ தேடுபவள்போல குனிந்தபடி நடந்த அவள் ஒரு சடலத்தினருகில் அமர்ந்திருந்த ஒரு பெண்ணின் அருகில தாமதிக்கிறாள்.

சற்றுநேரத்தின் பின் துயரத்தால் சூம்பியிருந்த அந்த முகத்தை ஆழமாகப்பார்த்தபடி.

"உன் கணவனா'' என வினாவினாள்.

''இல்லை''

''அப்படியானால்...சகோதரனா: ''

''என் மகன். எனது கணவன் 13 நாட்களின் முன் இறந்துவிட்டார், இன்று இவன்......''

சிரமத்துடன் எழுந்தபடி அந்த வீரனின் தாய் மறுபடிபேசினாள்.

''கடவுளே நான் எப்படி உனக்கு நன்றிசொல்லுவேன்''

''எதுக்கு''

''நல்லவேளை அவன் தன்ர நாட்டுக்காகப் போராடேக்க செத்துப்போனான். அந்த மடோனாவின் மகனைப்போல இல்லாமல்...... கடவுளே அவனும் அவன் பிறந்த வயிறும் நாசமாப் போக''

''உன்ர மகனின்ர பிழையளுக்காக உன்னைத் தண்டிக்கிறதில எந்தவிதமான ஞாயமும் இல்லை. அவனை நீ இந்தப் பாதையில வழிநடத்தவில்லை எண்டதும் எங்க்ளுகக்கு விளங்குது. ஆனா உன்ர நிலமையையும் நாங்கள் விளங்கிக் கொள்ளுறம். உன்ர மகனுக்கு உன்னைப் பற்றிய நினைப்பு இருக்கும் எண்டு நீ எதிர்பார்த்தா நீ ஏமாறப்போகிறாய்.''

தமிழாக்கம்
**வசந்தா**

''பரவாயில்லை''

அவர்கள் அவளுக்காகக் கோட்டைக்கதவுகளை ஒருமுறை திறந்தனர். இந்த மண்ணைவிட்டுப்பிரிய மனமில்லாதவளாக அவள் வெளியே நடந்தாள். தோள்களில் தாங்கமுடியாத சுமையைச் சுமப்பவர்களைப்போல இலேசாகத் தள்ளாடியபடி அவளது உருவம் எதிரியின் பாசறையை நோக்கி நகர்வதை நகர மக்கள் பார்த்தனர்.

தனது வருகை எதிரிகளின் முகாமினுள் பெரும் புதிரை உருவாக்கியதை அவள் உணர்ந்துகொண்டாள். அவளை அணுகிக் கேள்விக் கணைகளைத் தொடுத்தனர்.

''உங்கள் தலைவன் என் மகன்''

அவர்கள் அவளை ஆர்ப்பாட்டத்துடன் வரவேற்றனர். அவளது மகனைப்பற்றிப் புகழ்ந்துபாடினர். அவள் பெருமிதத்துடன் அவற்றைச் செவிமடுத்தாள். எப்படி அவளது மகன் வேறுவிதமாக இருக்கமுடியும்?

இப்போது அவள் மகனின் முன் நிற்கின்றாள். எவனைப் பிறப்பதற்கு முன்பிருந்தே அறிந்திருந்தாளோ, எவனை தன் இதயத்திற்குள் பேணிப் பாதுகாத்தாளோ அந்த மகனின் முன்னே அவள் நிற்கிறாள்.

அவனோ பட்டாடை அணிந்து பெருமிதத்தின் உச்சியில் நிற்கிறான். இந்தக் கோலத்தில் அவனைக்காண வேண்டும் என எத்தனைநாள் கனவு கண்டிருப்பாள்.

''அம்மா''

அவளின் கரங்களை முத்தமிடுகிறான்.

''நீ என்னிடம் வந்து விட்டாய்.

பார் நாளைக்கே இந்த நகரை உன் காலடியில் வைக்கிறேன்."

தாயாக இருந்ததாலோ என்னவோ அவளால் அநீதியைப் பொறுக்கமுடியவில்லை.

ஒரு உண்மையான தாய் அநீதியைக் காணும்போது பொங்கியெழுகிறாள். போர்க் கோலம் பூணுகிறாள்.

வளர்த்தல் எனது கடன்'' அவள் தனக்குள் உறுதி செய்கிறாள்.

"இன்று நள்ளிரவில் நாங்கள் தாக்குவோம். நாளை

(8 ம் பக்கம் பார்க்க)

# பள்ளி

நான் அவளை உற்றுப் பாக்கிறேன்.

உனக்கு வாய் இல்லையோ? நாக்கைப் பிடுங்கிறமாதிரி நாலு வார்த்தை எதிர்த்துப் பேசத் தெரியாதோ? நீயெல்லாம் மானமுள்ள பொம்பிளைதனே'' எண்டு நான் அவளைப் பாத்துப் பேசுறன்.

''உன்னை மாதிரி என்ரை பேத்தி இருந்தால் இந்த தெருவிலை நடக்கிறதே வேறையாயிருக்கும்'' எண்டு நான் பெருமையோடை சொல்லுறன்.

அவள் தலையைக் குனிஞ்சு கொண்டு பேசாமல் நிக்கிறாள்.

"இனிமேல் இப்பிடி ஒண்டும் தெரியாதவளாய்'' வாய் பேசாதவளாய் இருக்காதை. தைரியமாய் நிமிர்ந்து நில். அதுக்குப்பிறகு உன்னை ஒருத்தரும் அசைக்கவே மாட்டினம்...''

நான் உணர்ச்சி வசப்பட்டு தெரு எண்டதையும் மறந்து பெரிய குரலில் கத்துறன்.

அவள் நிமிர்ந்து என்னைப் பார்க்கிறாள். என்ரை பேத்தியின்ரை கண்ணிலை தெரியிற உறுதியும், தெளிவும் இப்ப இவளின்ரை கண்ணிலை தெரியுது. அவள் சைக்கிளை எடுக்கிறாள். ஒண்டும் பேசாமல் நிமிர்ந்து கொண்டு நிதானமாய் சைக்கிளோடிப் போறாள்.

''இவள் இனிமேல் கோழை இல்லை" எண்டது புரிய நான் பூரிச்சுப்போய் நிக்கிறன். ஓடிப்போற வாகனங்களுக்கிடையிலை அவள் அடிக்கடி மறைய நான் எட்டிஎட்டிப் பாக்கிறன். இந்த பெரிய வெளியைக் கடந்து அவள் மறையுறாள். ஒரு புள்ளியைப் போலை அவளின்ரை உருவம் என்ரை கண்ணை விட்டு மறையுது.

மனம் நிம்மதியாய் மூச்சு விட நான் திரும்பி நடக்கிறன்.

''இவ்வளவு காலாமாக சமைச்சதையும், பிள்ளையளைப் பெத்ததையும் தவிர வேறை என்னத்தைச் சாதிக்காய்...'' எண்டு பேத்தி அடிக்கடி என்னைக் கேக்கிறது இப்பவும் காதிலை ஒலிக்குது.

இவ்வளவு காலத்துக்குப் பிறகு - இத்தனை வயதுக்குப் பிறகு இண்டைக்கு நானும் ஒருத்திக்கு விழிப்புக் கொடுத்திருக்கிறன். ஒருத்திக்கு உண்மையைப் புகுத்தியிருக்கிறன் எண்டதை நினைக்கேக்கை என்னிலையே எனக்குப் பெருமையாய்க் கிடக்கு.

தூங்கிக்கிடக்கிற எங்கடை பெண்இனத்தை நாங்கள் தட்டி எழுப்பவேணும். அடக்குமுறைக்கெதிராய் போராடவேணும்...'' எண்டு மேடையிலை முழங்கிற என்ரை பேத்தியை நான் செதியிலை போய்ப் பார்க்கவேணும். நீ மட்டுமில்லை. இப்ப நானும் தான் ஒருத்திக்குத் திருப்பள்ளி எழுச்சி பாடியிருக்கிறன் என்பதை அவளுக்குப் பெருமையோடை சொல்லவேணும்.

# பெண்கள் மீது

அவர்களை எதிர்த்து வெல்ல முடியும் என்பதைச் ''சீனமாஜல்கலை'' வகுப்பில் நான்தெரிந்து கொண்டேன். எந்த ஆயுதமும் இன்றி இந்த வகுப்பில் அவர்களை நான் வீழ்த்தியிருக்கிறன். ஆனால் பெண்கள் அது தம்மால் முடியும் என்று நம்புவதில்லை. உடல் ரீதியாகவும் உளரீதியாகவும் நாங்கள் பலவீனமானவர்கள் என்ற நம்பிக்கைதான் பெண்களின் முதல் எதிரி. உடல் ரீதியான அபாயம் வரும்போது ஒரு பெண்ணால் நிச்சயம் தன்னைக் காப்பாற்ற முடியும், பயிற்சி இருந்தால்!

''சீன மாஜல் கலை,'' வகுப்பில் தான் எனக்குள் மறைந்திருந்த இந்த அற்புதமானசக்தியை நான் கண்டு பிடித்தேன் எனக்கே மிக ஆச்சரியமாகஇருந்தது!''

ஆண்கள் ஏன் இப்படியான வன் செயலில் இறங்குகின்றார். ஏன், அவர்களை உந்தும் உளவியல் பின்னணி என்ன என்பது தனியே ஆராயப்பட வேண்டிய மற்றொரு விடயமாகும்.

ஆனால் பெண்கள் பயிற்சி எடுத்துக் கொண்டால் தம்மில் தாமே நம்பிக்கை கொண்டால் அவர்களால் எதையும் சாதிக்க முடியும் என்பது இப் பெண்ணின் அனுபவத்தின் மூலம் தெட்டத் தெளிவாகத் தெரிகிறது.

புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்